பிரதம தபாற்கந்தோரில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 7 | இதழ் 29 | 28 ஜுலை 1969 | பக்கங்கள் 8 | விலை சதம் 10

### மாசேதுங் சிந்தனை

பாட்டாளி வர்க்கம் மனித வரலாற்றில் மிகப் பெரிய வர்க்கமாக இருக்கின்றது. சித்தாந்த ரீதியிலும், அரசியல்ரீதியிலும், பலத்திலும் அதுதான் மிக சக்திவாய்ந்த புரட்சிகர வர்க்க மாக இருக்கின்றது. கைப்பிடியளவு வர்க்க விரோதிகளை கூடிய பெருமளவு தனிமைப் படுத்தி அவர்களைத் தாக்குவதற்கு மக்களின் மிகப் பெரும்பான்மையினரை தன்னைச் சுற்றி அதனால் தான் ஐக்கியப்படுத்த முடியும்; ஐக்கியப்படுத்த வேண்டும்.

# சந்திரனில் மனிதன்

**அமெரிக்கர்கள் இரு மனிதர்களை சந்திரனில் இறக்கி மறுபடியும் அவர்களை பூமிக்குக் கொண்டு வந்துள்ளனர். விஞ்ஞானரீதியிலும், தொழில்நுட்பரீதியிலும் பார்க்கும் போது இது மாபெரும் சாதனையே ஆகும். பூமியின் ஈர்ப்பு சக்தியிலிருந்து (இது சந்திரனின் ஈர்ப்பு சக்தியிலும் பார்க்க வலுவானது) மனிதனைக் கொண்ட அண்ட வெளிக் கலத்தை உந்தித் தள்ளி, பின்பு அதனை மெதுவாகச் சந்திரமண்டலத்திற்குள் புகச்செய்து சந்திரனின் ஈர்ப்பு சக்திக்கு உட்படுத்தி, இறுதியில் அதனை சந்திரனில் இறங்கவைக்கும் அளவிற்கு போதுமான சக்தியை மனிதன் கண்டுபிடித்துள்ளான் என்பது இதன் அர்த்தமாகும்.**

எனவே ஒரு அண்டவெளிக் கலத்தை அதனது தாய்க் கப்பலுடன் இணைப்பதற்கு போதிய சக்தி ஏவுகளை ஒன்றிற்கு இருக்க வேண்டும். அத்தோடு சந்திரனின் ஈர்ப்பு சக்தியிலிருந்து அண்ட வெளிக் கலத்தை மீட்டெடுத்து, மறுபடியும் பூமியின் மண்டலத்திற்குள் இறங்குவதற்கும் போதிய சக்தி அதற்கு இருக்க வேண்டும்.

## மத நம்பிக்கைகளுக்கு விழுந்த பெரும் அடி

இந்த மாபெரும் சாதனையை ஏற்படுத்துவதற்கு முன்னர் விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டிருக்கவேண்டும். அண்டவெளி ஆராய்ச்சியில் ருஷ்யர்களே முதன் முதலாக காலடி வைத்தனர். தோழர் ஸ்டாலின் உயிருடன் வாழ்ந்த காலத்திலேயே சோவியத் யூனியனில் ஏவுகணைத் துறையில் பெருமளவான ஆரம்ப வேலைகள் செய்யப்பட்டன என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அறிவின் சர்வதேச ஒத்துழைப்பு, பங்கீடு ஆகியவற்றின் விளைவினால் ஏற்பட்ட இந்தச் சாதனையை அமெரிக்கர்கள் தமது தேசிய வெற்றியாகக் காட்டுகின்றனர். சந்திரனில் மனிதன் காலடி எடுத்து வைத்தது உண்மையில் விஞ்ஞானத் துறையிலும், அறிவுத் துறையிலும் ஏற்பட்ட முன்னேற்றமேயாகும். எமது அறிவின் எல்லைகள் பரந்துவிட்டன. இவற்றை நாம் ஏற்றுக் கொள்ளுகின்ற அதே வேளையில் இந்நாட்டிலுள்ள அமெரிக்கர்களும் வேறு நாடுகளிலுள்ளவர்களும் கட்டவிழ்த்துவிட்ட பிரச்சார ஆர்ப்பரிப்புக்களை நாம் ஏற்றுக் கொள்ளமுடியாது.

ஏகாதிபத்தியவாதிகளும், முதலாளித்துவ பத்திரிகைகளும் தமது நிதானத்தை இழந்துவிட்டதோடு அல்லாமல் சர்வசாதாரண மனிதனது நிதானத்தையும் இழக்கச் செய்துவிட்டனர். மனிதன் சந்திரனில் காலடி வைத்ததை அமெரிக்காவின் மாபெரும் வெற்றி என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. எத்தனையோ அடைமொழிகள் கொடுத்து பிரமாதப்படுத்துகின்றார்கள்.

நாம் சில கேள்விகளைக் கேட்க விரும்புகின்றோம். சந்திரனில் மனிதன் காலடி வைத்தது அவனது மாபெரும் சாதனையா? அவன் இதற்கு முன் சாதித்த சாதனைகளைவிட இச்சாதனை ஆழமான செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளதா? நாம் அப்படி எண்ணவில்லை. 1917ல் நடைபெற்ற ஒக்டோபர் புரட்சியும், 1949ல் நடைபெற்ற சீனப் புரட்சியும், அண்மையில் சீனவில் நிகழ்ந்த மாபெரும் பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியும், அக்காலகட்டத்தினது மாபெரும் சாதனைகளாகும். சந்திர மண்டலப் பிரயாணத்திலும் பார்க்க இவை மனிதனின் வருங்காலத் தலைவிதியை அதிகமாகப் பாதித்துள்ளன.

இச்சந்திர மண்டலச் சாதனையைச் சில விமர்சகர்கள் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததற்கு ஒப்பிட்டுள்ளனர். கொலம்பஸின் கண்டுபிடிப்பின் விளைவுகள் தான் என்ன? அமெரிக்காவில் ஆதிவாசிகளான சிவப்பு இந்தியர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். சில அமெரிக்க திரைப் படங்களில் வெகு திறமையாக எடுத்துக் காட்டுவதைப்போல் மேற்கத்தியர்களின் வெற்றியினால் ஏற்பட்ட படுமோசமான கொடுமைகள் நிறைந்த நீக்ரோ அடிமைமுறை உலகிலேயே பெரும் கொள்ளைக் காரர்களையும், கொலைகாரர்களையும் தோற்றுவித்த நாகரிகம், வியட்நாமில் செய்யப் படும் அட்டூழியங்கள், உலகத்தின் பல ஏனைய தொல்லைகளுக்குக் காரணமான ஆக்கிரமிப்புத் தன்மைகொண்ட ஏகாதிபத்தியம்—இதற்காகவே அமெரிக்காவை உலக மக்களின் முதல் நம்பர் எதிரியாகக் கொள்ளப்படுகின்றது - இவை யாவுமே கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்ததின் விளைவுகளாகும்.

இத்தகைய நாகரிகத்தையா நம்மைச் சுற்றியுள்ள கோள்களுக்கும் ஏற்றுமதி செய்யப் போகின்றார்கள். மனிதன் ஏனைய கோள்களுக்குச் செல்ல முற்படுமுன்னர் தான் வாழும் பூமியில் நிலவுகின்ற பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முதலில் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு மனிதனை சந்திரனில் இறக்கி மறுபடியும் பூமிக்கு கொண்டு வரும் அளவிற்கு விஞ்ஞானம் வளர்ச்சியடைந்துள்ளதேயானால், அந்த வளர்ச்சியை மனிதனின் தேவைகளுக்காகப் பாவித்து அவன் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏன் பாவிக்கக்கூடாது என்று கேட்க விரும்புகின்றோம். வயபிரு என்னும் இடத்தில் பட்டினியால் செத்து

**நமது விசேஷ நிருபர்**

மடிந்து கொண்டிருக்கும் மக்களுக்கும், வியட்நாமில் போர்க்களத்திலிருக்கும் வீரர்களுக்கும் சந்திரனில் மனிதன் காலடிவைப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகள் யாவை? இலங்கையிலுள்ள பொடிசிங்கோவிற்கு இதனால் ஏற்படப் போகின்ற லாபம் தான் என்ன? உயர்ந்து செல்லும் அவனது வாழ்க்கைச் செலவை இது குறைக்குமா?

சந்திரனில் மனிதன் காலடி எடுத்து வைத்தது சம்பந்தமாக அண்மையில் ஒரு கேலிச் சித்திரம் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தது. அக்கேலிச் சித்திரத்தில் சந்திரனில் காலடி வைத்த விண்வெளி வீரர்களை வரவேற்பதற்கு பொடிசிங்கோ சந்திரனில் தயாராகவிருக்கின்றார். ''நீ எப்படியப்பா இங்கு வந்தாய்'' என்று விண்வெளி வீரர்கள் கேட்டபொழுது தான் வாழ்க்கைச் செலவு

8-ம் பக்கம் பார்க்க



இலங்கை தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கத்தின் பொகவந்தலாவை கிளையின் திறப்பு விழாவையொட்டி நடைபெற்ற இவ் ஊர்வலத்தில் தொழிலாளர்கள் புரட்சிகர கோஷமிட்டார்களென பொகவந்தலாவை பொலிஸ் இரு தொழிலாளர்களை கைது செய்தது. கைது செய்யப்பட்ட தமது தோழர்களை பொலிஸ் பிடியிலிருந்து புரட்சிகர உணர்வுடன் விடுவித்த தொழிலாளர்கள் வீரமுடன் அணிவகுத்துச் செல்லும் ஒரு காட்சி.

இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின்

விசேஷ மாநாடு

ஆகஸ்ட் 5ந் திகதி காலை 9 மணிக்கு

கொழும்பு புதிய நகர மண்டபத்தில்

நடைபெறும்

### இ. போ. ச. கடைநிலை ஊழியர்களுக்கு அளிக்கப்படும்

# நியாமற்ற சம்பளமுறை மாற்றப்பட வேண்டும்

## இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம்

## கூட்டுக் கமிட்டியில் குரல் எழுப்பியது

**1969,** ஜூன் மாதம் 4 ந் திகதி, இ. போ. ச. கூட்டுக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் இ. போ. ச. விலுள்ள கடைநிலை ஊழியர்களின் சம்பளப் பிரச்சினை சம்பந்தமாக இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் விபரங்களை சமர்ப்பித்ததோடு தற்போதுள்ள மோசமான சம்பள நிலைமையும் எடுத்துக் காட்டினார்கள்.

### காரியாலய உதவியாளர்கள்

1958 முதல் 1959, ஜனவரி 1 ந் திகதி வரை வேலையில் ஈடுபட்டிருந்த ஊழியர்களுக்கு அலவன்ஸ் உட்பட சம்பளம் ரூ. 96. 00 கொடுக்கப்பட்டது. 1959 குப் பின் ரூ. 110. 00 சம்பள முறையில் வேலைக்கு புதியவர்கள் அமர்த்தப்பட்டார்கள். 1958 முதல் வேலை செய்த ஊழியர்களுக்கு ரூ. 96. 00 சம்பளத்துடன் அரசாங்க அலவன்ஸ் ரூ. 17.50 சதமும், விசேஷ அலவன்ஸ் ரூ. 15. 00 ம் 1968, ஆகஸ்ட் 1 ந் திகதி சேர்க்கப்பட்டது. இதன்படி காரியாலய உதவியாளர்களின் சம்பளம் ரூ. 128. 50 சதமாக்கப்பட்டது.

எனினும், 1958, ஜனவரி 1 ந் திகதிக்குப் பின் ரூ. 110-00 சம்பளத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஊழியர்களுக்கு 1968, ஏப்ரல் 1 ந் திகதி வருடாந்த சம்பளவுயர்வாக ரூ. 3.00 வீதம் நான்கு வருடங்களுக்கு மாத்திரம் ரூ. 12.00 சேர்க்கப்பட்டு, ரூ. 122.00 சம்பளமாக்கப்பட்டது. ஆனால், சம்பளவுயர்வு கணக்கிடும்போது இவர்களது பாக்கிப்பணம் கொடுக்கப்படவில்லை.

### காரியாலய தொழிலாளர்கள்

1958 முதல் 1959, ஜனவரி மாதம்வரை ரூ. 90.00 மாத சம்பளத்தில் வேலைக்கமர்த்தப்பட்டார்கள். ரூ. 17.50, ரூ. 15.00ம் சேர்த்து அவர்களுக்கு ரூ. 122.50 சதம் மாத சம்பளம் கொடுக்கப்பட்டது. 1959, ஜனவரி 1ந் திகதிக்குப் பின் ரூ. 100.00 மாத சம்பளத்தில் புதியவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். 1968, ஏப்ரல் 1ந் திகதி வருடாந்த சம்பளவுயர்வாக ரூ. 3.00 வீதம் மூன்று சம்பள உயர்வுகளோடு ரூ. 109.00 மாத சம்பளமாக்கப்பட்டது. எனினும், இச் சம்பளவுயர்வு கணக்கிடப்பட்டபோது இவர்களின் பாக்கிப்பணம் கொடுக்கப்படவில்லை. அதனால், காரியாலய உதவியாளர்களுக்கும், காரியாலய தொழிலாளர்களுக்கும் அவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட நாளிலிருந்து பாக்கிப் பணம் கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்படுகிறது. அவர்களின் இரண்டாவது பிரச்சினை, அரசாங்க அலவன்ஸ் ரூ.17.50 சதமும், விசேஷ அலவன்ஸ் ரூ. 15.00ம், ரூ. 110.00, 100.00 மாத சம்பளங்களுடன் சேர்க்கப்படவில்லையென்பதே. மூன்று சம்பளவுயர்வுகளோடு ரூ. 109 சுப்பட்டது. எனினும், இச் சம்பளவுயர்வு கணக்கிடும்போது இவர்களின் பாக்கிப் பணம் கொடுக்கப்படவில்லை. அதனால், காரியாலய உதவியாளர்களும், காரியாலய தொழிலாளர்களும் கோருவது, தாம் வேலைக்கு அமர்த்தப்பட்டதிலிருந்து பாக்கிப் பணம் வேண்டுமென்பதே. அவர்கள் கிளப்பக்கூடிய இரண்டாவது பிரச்சினை அரசாங்க அலவன்ஸ் ரூ. 17.50 சதமும், விசேஷ அலவன்ஸ் ரூ. 15.00ம், ரூ. 110.00, 100.00 சம்பளத்துடன் சேர்க்கப்படவில்லை என்பதே. மேலே குறிப்பிட்ட அலவன்ஸ்கள், கடைசிப் பிரிவுக்கு சேர்க்கப்பட்டுள்ளது என நிர்வாக பொறுப்பதிகாரியின் எண்: பி. எல். ஆர். 176 (iv)ம், 3-4-69 திகதியிடப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தும் கணக்கிடும் போது சேர்க்கப்படவில்லை. ரூ. 96.00 சம்பளம் பெறும் ஊழியருக்கு அலவன்ஸை சேர்க்கும்போது ரூ. 128.50 சதம் வரும்போது, 1958, ஜனவரி 1ந் திகதிக்குப் பின் அமர்த்தப்பட்ட ஊழியர்களுக்கு இதைவிட சம்பளம் குறைய முடியாது. இந்த இரு பகுதி ஊழியர்களினதும் அடிப்படைச் சம்பளத்தை நிர்ணயிக்கும் போது 1958 முதல் வேலை செய்யும் ஊழியர்களோடு சமமாகப் பாவிக்காதது சபையின் நியாயமற்ற செயலாகும். அதனால், இந்த ஊழியர்களுக்கு அரசாங்க அலவன்ஸ், விசேஷ அலவன்ஸ் ஆக ரூ. 32.50 சதத்தை தமது சம்பளத்துடன் சேர்க்கப்படல் வேண்டும்.

நமது சங்கம் இந்த இரு காரணங்களையும் கவனத்தில் எடுக்குமாறு கமிட்டியைக் கேட்டுக்கொண்டதோடு, இந்த இரு பகுதி ஊழியர்களுக்கும் நியாயமான புதிய சம்பளத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரி இலங்கை முதலாளிகள் சம்மேளனம் 1967, எண் 5 இலக்கமிடப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின்படி காரியாலய உதவியாளர்களுக்கு சம்பளம் ரூ. 150/ - 5x22 - 7.50x9 - 330/- என்ற சம்பளமும், காரியாலய தொழிலாளர்களுக்கு, ரூ. 148.00 - 4x22 - 6x9 - 284/- என்ற சம்பளத்தையும் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த கூட்டு ஒப்பந்தத்தின்படி காரியாலய உதவியாளர்களுக்கு ரூ.25.00 விசேஷ அலவன்ஸ் கிடைப்பதை எடுத்துக்காட்டி இ. போ. ச. வும் இதை ஏற்க வேண்டுமென வற்புறுத்தியது.

### புத்தகம் கட்டுவோர்

இ. போ. ச. புத்தகம் கட்டுவோர், காரியாலய உதவியாளரின் பிரிவில் அடங்கிய சம்பளத்திற்கு உட்பட்டவர்களாக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கும் அரசாங்க அலவன்ஸ், விசேஷ அலவன்ஸ் ரூ. 32. 00 கொடுக்கப்படவில்லை. இலங்கை உல்லாச பிரயாணிகள் சபை, இலங்கை அரசாங்க இன்ஜினியரிங் கூட்டுத்தாபனம், பெட்ரோலியம் கூட்டுத்தாபனம் ஆகியன புத்தகம் கட்டுவோருக்கு கொடுக்கும் சம்பள முறையும் x பிரிவும் இ. போ. ச. புத்தகம் கட்டுவோருக்கும் கொடுக்கப்படல் வேண்டுமென இலங்கை மோட்டார் தொழிற் சங்கத்தின் பிரதிநிதிகள் வற்புறுத்தினார்கள்.

### பைல் பொறுப்பாளர்கள்

இ. போ. ச. பைல் பொறுப்பாளர்கள் x பிரிவு ஊழியர்களென பிரிக்கப்பட்டு ரூ. 225. 00 சம்பள திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். ஆனால், அரசாங்க சேவையிலுள்ள பைல் பொறுப்பாளர்களும், லிகிதர்களும் ஒரே சம்பளப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். புத்தகம் கட்டுவதும், பைல் பொறுப்பும் கொடுத்துள்ள திரு. ஜே. ஏ. எம். ஜயசிங்காவுக்கு சபையின் சேவைப் xiii பிரிவின்படி சம்பளம் கொடுக்கப்படுவதாக கூறிய அவர் (ஜே. ஏ. எம். ஜயசிங்க) பைல் பொறுப்பாளருக்குள்ள சம்பளத்தை கடிதப் பொறுப்பாளர்களுக்குள்ள சம்பள அடிப்படையில் தமது சம்பளத்தை அதிகரிக்குமாறு கேட்டுக்கொண்டார். கடிதப் பொறுப்பாளர், உயர் பிரிவில் பதவியுயர்வு பெறுவதற்கு சபையின் xi வது சேவைப் பிரிவில் சேர்க்குமாறு கேட்டுக் கொண்டார்.

### ரோனியோ யந்திரம் இயக்குபவர்கள்

காரியாலய உதவியாளர்களும், ரோனியோ யந்திரம் இயக்குபவர்களும், xiii பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இந்த இரு பிரிவினரையும் ஒரே பிரிவில் சேர்த்திருப்பது நியாயமற்றதாகும் என்பதை பிரதிநிதிகள் எடுத்துக் காட்டினார்கள். ரோனியோ யந்திரம் இயக்குபவர்கள், காரியாலய உதவியாளர்களை விட உயர் பிரிவு என அரசாங்கமும், தனியார் நிறுவனங்களும் மற்றும் தேசியமய கூட்டுத்தாபனங்களும் கருதுவதோடு, அவர்களுக்கு சம்பளமும் கூடுதலாகக் கொடுக்கின்றன. காரியாலய உதவியாளர்களுக்கும், ரோனியோ யந்திரம் இயக்குபவர்களையும் ஒரே சம்பளத் திட்டத்தில் இ.போ.ச. வைத்துள்ளது. ரோனியோ இயக்கும் பதவியை, காரியாலய உதவியாளர்கள் பதவியுயர்வு பெறும் பதவியாகக் கருதப்படுகிறது. எனினும், மிகப் பொறுப்புள்ள வேலையான ரோனியோ இயக்குவதற்கு நியமிக்கப்பட்டவர்களைக் குறைந்த சம்பளமும் xiii பிரிவிலும் சேர்க்கப்பட்டுள்ளதோடு, அச்சுத் தொழிலாளர்களையும் ix பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளதையும் எடுத்துக் காட்டினர் பிரதிநிதிகள். (இரண்டும் ஒரே தரமானது) விவரங்கள் இப்படியிருக்கும் போது. ரோனியோ இயக்குபவர்களை ix பிரிவில் இணைத்து குமாஸ்தாக்களுக்குரிய சம்பளத்திற்கு உட்படுத்தப்பட வேண்டுமென கேட்டுக் கொண்டார்கள்.

### தொலைபேசி இயக்குனர்கள்

1965.10.1 ந் திகதி கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களின் சம்பள திட்டத்தை திருத்தி அமைத்தபோது தொலைபேசி இயக்குனர்கள் ஐந்து வருட சேவையின் பின் ix ம் தரத்திற்கு தரமுயர்த்தப்படவும், ரூபா 180/-750 - ரூபா 330/- என்ற சம்பளத் திட்டப்படி x தரத்திற்கு போடப்பட்ட ஊழியர்களை திரும்பவும் x தரத்திற்கு மாற்றி அதிகமாக கொடுக்கப்பட்ட பணத்தை சம்பளத்திலிருந்து வெட்டவும் செய்யப்பட்டது. இது மேற்படி ஊழியர்களுக்குச் செய்யும் படுதுரோகம் எனக் காட்டி, அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்தை திரும்பவும் அவர்களுக்குக் கொடுத்து அவர்களை ix தரத்துக்கு திரும்பவும் தரமுயர்த்தும் படியும் கேட்டுக் கொண்டனர். இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனம், இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனம், மீன்பிடி கூட்டுத்தாபனம், இலங்கை எண்ணெய் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் தொலைபேசி இயக்குனர்களுக்கு வருடாந்தம் ரூ. 10/- சம்பள உயர்வுடன் கூடிய ரூ. 225/-ல் ஆரம்பமாகும் சம்பளம் அளிக்கப்படுவதை எடுத்துக்காட்டி - ix தர குமாஸ்தாக்களுக்குச் சமமானமானதும் வருடாந்த ரூபா 10/- சம்பள உயர்விலானதுமான சம்பளத் திட்டம் தொலைபேசி இயக்குனர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என எடுத்துக் காட்டினார்கள்.

### எண்ணெய் நிரப்புவோர்

1964ம் ஆண்டு எண்ணெய் நிரப்புபவர்களுக்கு சம்பள உயர்வுடன் கூடிய சம்பள திட்டம் இல்லைஎனவும், 1964-3-1 திகதி முதல் செல்லுபடியாகக் கூடியதாக ரூ. 135/- -25x3-210/- என்ற சம்பள அடிப்படையில் அவர்கள் கூட்டுத்தாபனத்தின் xiii தர ஊழியர்களாக சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள் எனவு மேற்படி எண்ணெய் நிரப்புபவர்களுக்கு 153/- ல் ஆன சம்பள திட்டமொன்று உள்ளதெனவும் சுட்டிக்காட்டப் பட்டது. 1964ம் வருடத்தின் சம்பள திருத்தியமைத்தலுக்குப் பின் சேர்த்துக் கொள்ளப் பட்ட ஊழியர்களுக்கு 1964 ம் வருடத்திற்கு முன்னைய முறையிலான சம்பளமே வழங்கப் பட்டதால் ஏற்பட்டுள்ள சிக்கலை இல்லாமற் செய்ய அவர்களின் முழு சேவை காலத்துக்கும் சம்பள உயர்வு பெற்றுத்தர வேண்டு மெனவும் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இ. போ. ச. எண்ணெய் நிரப்புவோர் இலங்கை பெட்ரோலியம் கூட்டுத்தாபன எண்ணெய் நிரப்புவோர் பெரும் சம்பளத்தை விடக் குறைந்த சம்பளம் பெறுகிறார்கள் எனவும், சம்பளத்தில் சம நிலை ஏற்பட சம்பளத்திருத்த மொன்று ஏற்படுத்த வேண்டு மெனவும் அவர்கள் டீசல் நிரப்பும் வேலைகளைச்செய்வதால் அவர்களுக்கு ஒரு மேலதிக சம்பளம் அளிக்கப்பட வேண்டு மெனவும் கேட்டுக் கொண்டார்கள்.

1963ம் ஆண்டு நிர்வாகத்துக்கும் தொழிற் சங்கத்துக்கும் இடையிலான நட்புறவு மோசமானதெனவும், கடைநிலை ஊழியர்களின் சம்பளம் சம்பந்தமாக இப்போதுள்ள முறை, நிர்வாகம் தனிப்பட்ட முறையில் தயாரித்த தெனவும் சம்பள குறைப்பாடுகளை நீக்கவும் கடைநிலை ஊழியர்களுக்கு நல்லதொரு சம்பள முறையை ஏற்படுத்தவும் இப் பிரச்சினையை கூட்டுக் கமிட்டியில் சமர்ப்பிக்க இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம் தீர்மானித்துள்ளது. இங்கு குறிப்பிடப்படாத சகல குறைவான சம்பளம் பெறும் பிரவினர்களின் கோரிக்கைகளை பின் சமர்ப்பிப்போமென தோழர் சமல் குறிப்பிட்டார்.

தற்போது குறைந்த சம்பளம் கொடுப்பதால், இ. போ. ச.விலுள்ள கடைநிலை ஊழியர்கள் குழப்பமடைந்துள்ளார்கள். திருப்தியான சம்பள முறையை ஏற்படுத்தவும், இப்போது அமுலிலுள்ள சம்பள முறையை நீக்கவும் உடனடியாக இ. போ. ச, நிர்வாகம் முனைய வேண்டு மெனவும் தோழர் சமல் குறிப்பிட்டார். மேலும் கீழ்ப் பிரிவிலுள்ள சம்பளமுறையையொட்டி 1964ல் சகல பிரிவுகளுக்கும் சம்பள உயர்வு கொடுக்கப்பட்ட முறை குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் குறிப்பிட்டார். ஊழியர்களை சேவைப் பிரிவில் அமர்த்தியுள்ள முறைகள் நியாயமற்றவை அவர்களின் சம்பளங்கள் தீர்மானிக்

7-ம் பக்கம் பார்க்க

# கிளிநொச்சியில் வெற்றிகரமான விவசாயிகள் மாநாடு

**"பொருளாதாரக் கோரிக்கைகளுக்காகப் போராடுவதால் மட்டுமோ - அவற்றை வென்றெடுப்பதால் மட்டுமோ விவசாயிகள் தமது பிரச்சினைகளுக்கோ, தமது துன்பமயமான வாழ்க்கைக்கோ முடிவு கண்டிட முடியாது. தம்மைச் சுரண்டும் வர்க்கத்திடமிருந்து அரசு அதிகாரத்தைப் பறித்தெடுத்து தொழிலாளி - விவசாயி வர்க்க அரசு அதிகாரத்தை நிறுவுவதன் மூலமே விவசாயிகள் விமோசனம் காண முடியும்."**

## அரசு அதிகாரத்திற்கான போராட்டத்திற்கு அறைகூவல்

இவ்வாறு, கடந்த 17ந் திகதி அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் கிளிநொச்சி மாவட்ட மாநாட்டில் உரையாற்றிய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். பிரதேச செயலாளர் தோழர் வி. ஏ. கந்தசாமி கூறிய போது மாநாட்டில் குழுமியிருந்த அனைவரும் கரகோஷத்துடன் அதனை ஆமோதித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளைப் பொறுத்தவரை முதலாவதாக நடந்த இம் மாநாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இன்றையச் சுரண்டல் அமைப்பின் கீழ் - சுரண்டல் வர்க்கத்தின் கட்சியான யு. என். பி. ஆட்சியின் கீழ் - நிலச் சொந்தக்காரர்களாலும், முதலாளிகளாலும், ஊழற்கார அதிகாரிகளாலும் சுரண்டப்பட்டு, சூறையாடப்பட்டு, அடக்கி ஒடுக்கப்பட்டு மிகவும் வறியவர்களாகவும் துன்பம் அனுபவிப்போராகவும் உள்ள இந்நாட்டு ஏழை விவசாயிகளில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளும் ஒரு பகுதியினர். அவர்கள் தமது பிரச்சினைகளுக்கும், துன்பத்துக்கும் முடிவு கட்டும் பாதையில் செல்ல இம் மாநாட்டில் கூடினர்; தமது பிரச்சினைகளை விவாதித்தனர்; தீர்மானங்களை நிறைவேற்றினர். மாநாட்டைத் தொடர்ந்து ஆர்ப்பாட்ட ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடத்தி மாநாட்டின் முடிவுகளை நாடறியச் செய்தனர்.

புரட்சிகர விவசாயிகளின் இம் மாநாடு, கிளிநொச்சி பிரதேசத்திலுள்ள சுரண்டும் கும்பலுக்கும், பிற்போக்குவாதிகளுக்கும் கலக்கத்தைக் கொடுத்தது. ஆதலால், இந்த மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என விவசாயிகளை தடுத்தனர்; வெருட்டினர்: பல சூழ்ச்சிகளையும், தந்தரங்களையும் கையாண்டனர். ஆனால் விழிப்புற்ற விவசாயிகள் இவற்றுக் கெல்லாம் பயப்படாது மாநாட்டுக்கு வருகை தந்தனர். கிளிநொச்சி, தருமபுரம், இராமநாதபுரம், திருவையாறு, வட்டக்கச்சி, விசுவமடு மற்றும் கிளிநொச்சி பிரதேசத்திலுள்ள ஏராளமான விவசாயப் பிரதிநிதிகள் - பெண்கள் உட்பட-வந்தனர். மாநாடு வெற்றிகரமாக நடந்தேறியது.

### அறிக்கை வியசாயிகளின் பிரச்சினைகளை விபரித்தது

கிளிநொச்சி ஈஸ்வரன் தியேட்டரில் காலை பத்து மணிக்கு ஆரம்பித்த மாநாட்டில் அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் கிளிநொச்சி மாவட்டக் கமிட்டியின் செயலாளர் தோழர் என். யோகேந்திரநாதன் கமிட்டியின் சார்பில் அறிக்கை சமர்ப்பித்தார். கிளிநொச்சிப் பிரதேச விவசாயிகளின் பிரச்சினைகள், அவர்களின் இன்றைய வறிய-கஷ்டமான வாழ்க்கை, விவசாயிகளின் கோரிக்கைகளுக்காக விவசாயிகள் சம்மேளனம் நடத்திய போராட்டங்கள் ஆகியவற்றையெல்லாம் அறிக்கை விவரித்தது. கிளிநொச்சி எம். பி.யினதும், அரசாங்க உயர்தர அதிகாரிகளினதும் விவசாயிகளுக் கெதிரான நடவடிக்கைகளையும், ஊழல்களையும் அம்பலப் படுத்தியது அறிக்கை, இவர்களின் தில்லுமுல்லுகளினுலும், ஓரபட்சமான போக்குகளினுலும், ஊழல்களாலும் விவசாயிகள் எவ்வாறு பாதிக்கப்படுகிறுர்கள் என்பதையும் அறிக்கை விவரித்தது. இந்தக் கனவான்கள் முதலாளிகளினதும், பணக்கார வயல் சொந்தக்காரர்களினதும் கையாட்களாகச் செயல் படுவதையும், அதேவேளையில் வறிய விவசாயிகளுக்கு விரோதமாக செயல்படுவதையும் அறிக்கைத் தக்க ஆதாரங்களோடு நிரூபித்துக் காட்டியது. அரசாங்கத்தின் விவசாயக் கொள்கையை விமர்சித்த அறிக்கை, நிலமற்ற எத்தனை எத்தனையோ ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்காமல் பெரும் பெரும் வெளிநாட்டு, உள்நாட்டு முதலாளித்துவக் கம்பெனிகளுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வழங்கியதையும், விவசாயிகளின் பிரதான பிரச்சினையான நீர்ப்பாசனப் பிரச்சினையைத் தீர்க்க தகுந்த நடவடிக்கை எடுக்காததையும் அறிக்கை கண்டித்தது. அத்துடன், வேளாண்மை பொய்த்ததனுலும், கஷ்டத்தினுலும் தாம் வாங்கிய வங்கிக் கடனை திருப்பிக் கட்ட முடியாத ஏழை விவசாயிகளின் கூப்பன்களைப் பறித்ததையும் அறிக்கை மிக வன்மையாகக் கண்டித்தது. மேலும் அறிக்கை, விவசாயிகளின் கஷ்டங்களையும் பிரச்சினைகளையும் தீர்க்கத் தவறிய அரசாங்கம் உணவு உற்பத்தி அதிகரித்துவிட்டது என்று புளுகுவதையும் அம்பலப்படுத்தியது. அறிக்கை இறுதியாக விவசாயிகள் தமது விடுதலைக்கு முதலாளித்துவ அரசாங்கங்களையோ, பாராளுமன்றத்தையோ, எம். பி. மார்களையோ, உயர்தர அதிகாரிகளையோ நம்பியிராமல் அவர்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு இந்நாட்டிலுள்ள தொழிலாளி வர்க்கத்தோடும் இதர புரட்சிகர, முற்போக்கு சக்திகளுடன் ஐக்கியப்பட்டு புரட்சிகரப் போராட்டத்தை நடத்தி ஒரு பாட்டாளி வர்க்க அரசை நிறுவுவதன் மூலம் மட்டுமே விவசாயிகளுடைய பிரச்சினைகளுக்கும், அவர்களின் துன்பமயமான வாழ்க்கைக்கும் தீர்வுகாண முடியும் எனச் சுட்டிக்காட்டி, அதற்காக அறைகூவலையும் விடுத்தது.

### புரட்சிகரப் பாதையே சரியான பாதை

அறிக்கையைத் தொடர்ந்து பல பிரதிநிதிகள் விவாதத்தில் கலந்துகொண்டனர். பேசிய பிரதிநிதிகள் அனைவரும் அறிக்கையில் காணப்பட்ட விஷயங்கள் உண்மையே என்று ஆமோதித்து தமது சொந்த அனுபவங்களையும் அதற்கு ஆதாரமாக எடுத்துக் காட்டினர். அவர்கள் தமது கிராமங்களில் உள்ள கஷ்டமான நிலைமையையும், தமது விவசாய வாழ்க்கையின் துன்ப துயரங்களையும், பெரும் பணக்கார வயல் சொந்தக்காரர்களாலும், ஊழல்கார அதிகாரிகளாலும் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் ஆவேசத்துடன் எடுத்துக் கூறினர். அதிகாரிகளின் யதேச்சாதிகாரத்தையும், அதிகாரத் திமிரையும் எடுத்துக் காட்டிக் கண்டித்தனர். தமிழரசின் கிளிநொச்சி எம். பி. ஏழை விவசாயிகளுக்கு எதையும் செய்யவில்லை, பெரும் பணக்கார நிலச் சொந்தக்காரர்களுக்குத்தான் சேவை செய்தார் என்று ஆத்திரத்துடன் கூறினர். பேசிய சகல பிரதிநிதிகளும், அறிக்கை சுட்டிக்காட்டிய அரசு அதிகாரத்தைப் பெற வேண்டும் என்ற உண்மையை அங்கீகரித்தனர். இதற்கு பாராளுமன்ற வழியல்ல, புரட்சிகரப் போராட்டப் பாதைதான் சரியான ஒரே வழி என்றும் கூறினர்.

விவாதத்தின்பின் அறிக்கை ஓரிரு திருத்தங்களுடன் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதனை அடுத்து, இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவரான தோழர் ஆரியவன்ச குணசேகரா பேசினுர். அவர் தனது உரையில் இன்றைய யு. என். பி. அரசாங்கத்தின் மக்கள் விரோதக் கொள்கைகளை அம்பலப்படுத்தினுர். யு. என். பி. ஆட்சி மூலமோ அல்லது முக்கூட்டு ஆட்சியின் கீழோ விவசாயிகளின் பிரச்சினைகள் தீராது என்பதை விளக்கினுர். இந்தியாவிலும், கிழக்காசிய நாடுகளிலும் தமது விடுதலைக்காக விவசாயிகள் நடத்திவரும் ஆயுதந்தாங்கிய போராட்டத்தைச் சுட்டிக் காட்டி அந்தப் பாதை ஒன்றுதான் இலங்கை விவசாயிகளுக்கும் விமோசனத்தைத் தரும் என்றுர்.

அடுத்துப் பேசிய தோழர் வி. ஏ. கந்தசாமி இலங்கையரின் இன்றைய அரசியல் நிலைமையைக் கூறினுர். தொழிலாளர்களும்—விவசாயிகளும் உழைக்கும் இதர வெகுஜனங்களும் எவ்வாறு சுரண்டப்படுகின்றனர் என்பதை விளக்கினுர். சுரண்டல் அமைப்பின் கீழ் இப் பாட்டாளி மக்களுக்கு விமோசனமே இல்லை என்றுர். தொழிலாளிகளாயினும் சரி, விவசாயிகளாயினும்சரி பொருளாதாரக் கோரிக்கைகளுக்குப் போராடுவதோடு மட்டும் நின்றுவிட முடியாது; இதனுல் சுரண்டல் ஒழிந்துவிடப்போவதில்லை. தம்மைச் சுரண்டும் முதலாளித்துவ—நிலப்பிரபுத்துவ வர்க்கத்திடமிருந்து அரசு அதிகாரத்தைப் பறித்தெடுத்து தமது சொந்த அரசை நிறுவ வேண்டும். விமோசனத்துக்கு விவசாயிகள் முன்னுல் உள்ள பாதை இது ஒன்றே ஒன்றுதான் என்றுர். இதனை நிறைவேற்ற விவசாயிகள் ஒரே அணியில் ஐக்கியப்பட்டு, புரட்சிகரப் போராட்டப் பாதையில் முன்செல்ல வருமாறு அறைகூவினுர்.

தோழர் கந்தசாமியின் உரையுடன் மாநாட்டு நிகழ்ச்சிகள் முடிவடைந்தன. அதனை அடுத்து, உணர்ச்சிமிக்க விவசாயிகளின் ஆர்ப்பாட்ட ஊர்வலமும், ரொட்ரிகோ மைதானத்தில் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. பொதுக் கூட்டத்தில், அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் டி. டி. பெரேரா, ஆரியவன்ச குணசேகரா, எஸ். இளங்கீரன், கே. செந்தில்வேல், எஸ். சிவதாசன், என். யோகேந்திர நாதன், எஸ். கணேஸ் மற்றும் பலரும் பேசினர். கூட்ட முடிவில் 'குடி நிலம்' எனும் நாடகம் நடைபெற்றது.

(மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை 8-ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்தில் தோழர் எஸ். டி. யின் கேள்விகள்

1. பொகவந்தலாவையில் இம் மாதம் 13ந் திகதி தோட்டத் தொழிலாளர்கள் அனுமதி பெற்று நடத்திய ஊர்வலத்தின் போது, கடமையாற்றிய பொகவந்தலாவை பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டரும் மற்றும் பொலிஸாரும் மது அருந்தியிருந்தார்கள் என்பதை கௌரவ பிரதமர் அறிவாரா? பொலிஸார் மது அருந்தியிருந்தார்கள் என்பதை நான் உறுதியாகக் கூற முடியும். நான் அவர்களுடன் பேசிய பொழுது மது வாடை வீசியது.

தோட்டத் தொழிலாளர்கள் புரட்சிகர கோஷங்களை கோஷித்தார்கள் என்ற சாக்கில் அவர்களை அநீதியான முறையில் பொலிஸார் கைது செய்து அவர்களை துன்புறுத்தினுர்கள் என்பதை கௌரவ பிரதமர் அறிவாரா? வெறுக்கத் தக்க இச் சம்பவத்தைப் பற்றி ஒரு விசாரணை நடத்துமாறு பிரதமர் உத்தரவிடுவாரா?

2. இம் மாதம் 19ந் திகதி ஆரம்பமான மாவிட்டபுரம் கோயில் வருடாந்த திருவிழாவின் போது, வட மாகாணத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் கோயிலுக்குள் பிரவேசிக்க முடியாமல் இவ்வருடமும் தடுக்கப்பட்டுள்ளதை கௌரவ பிரதமர் அறிவாரா?

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பொலிஸார் பாதுகாப்பு அளிக்காததோடு, அவர்கள் கூறிய முறையிடுகளையும் ஏற்றுக் கொள்ள மறுத்து, கோயில் முகாமையாளர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் கோயிலுக்குள் பிரவேசிக்காமல் தடுப்பதற்கு பொலிஸார் உதவியதை பிரதமர் அறிவாரா?

சமூக குறைபாட்டு தடைச் சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமாக பிரதமர் எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் என்ன?

**வாசியுங்கள்**

**தொழிலாளி**

விலை சதம் 10

விபரங்களுக்கு:-

121. யூனியன் பிளேஸ்

கொழும்பு-2

# முதலாளித்துவ பாராளுமன்றப்

**நவ - திரிபுவாதிகளை (ஜோதிபாசு - நம்பூதிரிபாட் கோஷ்டியினர் - மொர்) நாங்கள் நிராகரித்ததின் பின்னர், கடந்த பதினெட்டு மாதங்களில் நிகழ்ந்த சம்பவங்கள் எமது நிலையின் சரியான தன்மையை சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கின்றன. அவை, பாராளுமன்றப் பாதையை நிராகரித்து புரட்சிகர போராட்டப் பாதையைப் பின்பற்றும் நெறி முற்றுமுழுதாகச் சரியானது என நிரூபிக்கின்றன.**

இந்தக் காலகட்டத்தில் இந்திய மக்கள் சகல தொழிலாளி வர்க்க திரிபுவாத கட்சிகளினதும் படுமோசமான சந்தர்ப்பவாதத்தையும், அவர்களது சம்பூரண அரசியல் பங்கலோட்டுத்தனத்தையும் அறிந்து கொண்டனர். அவர்கள் சகல முதலாளி வர்க்க திரிபுவாதக் கட்சிகளிலும் நம்பிக்கை இழந்ததுடன் பாராளுமன்றப் பாதையின் கையாலாகாத் தனத்தையும் உணர்ந்துவிட்டனர்.

## இந்திய சமுதாயத்தின் அமைப்பு

எமது சமுதாயம், அரசு, அரசாங்கம் ஆகியவற்றின் நிலை, தன்மை, குணும்சம் சம்பந்தமான எமது சரியான கணிப்பீட்டை நிகழ்ச்சிகள் உறுதிப்படுத்தியுள்ளன. திரிபுவாதக் கண்ணோட்டத்தை நிராகரித்த நாம், இந்தியா ஒரு அரை காலனித்துவ, அரை-நிலப்பிரபுத்துவ நாடு எனவும், இந்திய அரசு பெரும் நிலப்பிரபுக்களினதும், ஏகாதிபத்திய சார்பு—அதிகாரத்துவ முதலாளிகளினதும் அரசு எனவும், அரசாங்கம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தினதும் கைக்கூலி எனவும் கூறினோம். இந்தியப் பொருளாதாரம் ஏகாதிபத்திய நாடுகளின், முக்கியமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், சோவியத் திரிபுவாதத்தினதும் ''உதவி''களில் கேவலமாக தங்கியிருந்ததும், ஆயிரக்கணக்கான காட்டிக் கொடுப்பு உடன்படிக்கைகள், அநீதியான வர்த்தகம், ''உதவி'' என்பவற்றின் மூலமாக நமது நாடு ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு உள்ளாவதும், கேவலம், உணவுக்கு அமெரிக்க பி. எல். 480ல் தங்கியிருந்ததும் எமது சமுதாயத்தின் அரைகாலனித்துவத் தன்மையை நிரூபிக்கப் போதுமானவை.

நிலம், ஒருசில நிலப்பிரபுக்களின் கைகளில் பெருவாரியாகக் குவிதல், குத்தகை உருவத்தில் துன்பப்படும் விவசாயிகளினால் விளைவிக்கப்பட்ட உபரிப் பொருட்கள் முழுவதும் பறிமுதல் செய்யப்படல், கிராமப்புற ஜனத்தொகையில் சுமார் 40% விகிதத்தினருக்கு நிலம் சிறிதளவேனும் சொந்தமில்லாத நிலைமை, குரல்வளையை நெறிக்கும் வட்டி முறைச் சுரண்டல், ஏழை விவசாயிகள் அநியாயமாக வெளியேற்றப்படுவதும் சமூகத்தில் அநியாயமாக—புராதன காலத்தில் செய்யப்பட்டதுபோல் தாழ்த்தப்பட்ட மக்களை சித்திரவதை செய்தல் உட்பட—ஒடுக்கப்படுவது, உற்பத்திக்குப் பாவிக்கப்படும் தொழில் நுட்பத்தின் பின்தங்கிய தன்மை ஆகிய யாவும் எமது சமுதாயத்தின் அரை— நிலப்பிரபுத்துவ குணும்சத்தைத் துலாம்பரப் படுத்துகின்றன.

மிகவும் கூடிய இலாபச் சுரண்டலின் மூலம் இந்திய மக்கள் பிழிந்தெடுக்கப்படுதல், இந்தியச் செல்வத்தில் பெரும் பகுதி 75 ஏகாதிபத்தியச் சார்பு—அதிகாரத்துவ முதலாளிகளின் கையில் குவிந்து கிடத்தல், வெளிநாட்டு ஏகபோகிகளினதும், உள்நாட்டு பெரும் வியாபாரிகளினதும் நலன்களுக்கு அரசாங்கத்துறை பயன்படுத்தப்படல், அரசு இயந்திரத்தின் உதவியுடன் விவசாயிகளைக் கொள்ளையடிப்பதற்கும் நிலப்பிரபுக்களுக்கு இருக்கும் கட்டுப்பாடற்ற சுதந்திரம் ஆகியவை, அரசை இயக்குபவர்கள் பெரும் நிலப்பிரபுக்களும் ஏகாதிபத்திய சார்பு—அதிகாரத்துவ முதலாளிகளுமே என்பதை நிரூபிக்கின்றன.

இந்திய அரசாங்கத்தின்மீது அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், சோவியத் சமூக—ஏகாதிபத்தியத்தினதும் அரசியல், பொருளாதார, கலாச்சார, இராணுவ பிடியும், சோஷலிஸ சீனத்தைச் சுற்றிவளைக்கவும் தேசிய விடுதலைப் போராட்டங்களை நசுக்கவும் உலக ரீதியில் திட்டமிடும் அமெரிக்க—சோவியத் கும்பலுக்கு ஆதரவு நல்கும் அதன் கேடுகெட்ட வெளிநாட்டுக் கொள்கையும், இந்த எதிர்ப் புரட்சி திட்டத்தின் நலன்களை உறுதிப்படுத்துவதற்காக லத்தீன் அமெரிக்காவுக்கும் தென் கிழக்காசியாவுக்கும் இந்தியப் பிரதமரால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட விஜயமும், சீனவுக்கெதிரான சோவியத்தின் ஆயுத ஊடுருவலுக்கு இந்திய அரசாங்கம் ஆதரவும், செக்கோஸ்லவாக்கியாமீ தான சோவியத் ஆக்கிரமிப்புக்கு அது காட்டிய மறைமுக ஆதரவும், வியட்நாம் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுடன் அது கொஞ்சிக் குலாவுவதும் இந்திய அரசாங்கம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், சோவியத் திரிபுவாதத்தினதும் கைக்கூலி என்பதை ஊர்ஜிதமாக்குகின்றன.

தற்போதைய கட்டத்தில் எமது நாட்டின் பிரதான முரண்பாடு நிலப்பிரபுத்துவத்துக்கும் விவசாய வெகுஜனங்களுக்கும் இடையில்தான் நிலவுகின்றது என்ற எமது நிலையை, இந் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் வெடித்துச் சீறும் விவசாயிகளின் போராட்டங்கள் மேலும் உறுதிப்படுத்துகின்றன.

இந்தக் கட்டத்தில், இந்தியப் புரட்சி புதுமாதிரியான ஒரு ஜனநாயகப் புரட்சியாகும். அதன் பிரதான உள்ளடக்கம் விவசாயப் புரட்சி—அதாவது நாட்டுப் புறங்களில் நிலப்பிரபுத்துவத்தை ஒழித்துக் கட்டுவது—ஆகும். எமது நாட்டில் ஏகாதிபத்தியத்தின் இரு பிரதான ஊன்றுகோல்களில் ஒன்ருன (மற்ற ஊன்றுகோல் ஏகாதிபத்திய சார்பு—அதிகாரத்துவ முதலாளித்துவமாகும்) நிலப்பிரபுத்துவத்தை ஒழித்துக் கட்டுவதற்கு இந்திய மக்கள் அமெரிக்க, சோவியத் ஏகாதிபத்தியத்துக்கெதிராக கடுமையான நீண்டகாலப் போராட்டம் ஒன்றை நடத்த வேண்டும். நிலப்பிரபுத்துவக் கொடுமையில் இருந்து தம்மை விடுதலை செய்வதன் மூலம், இந்திய மக்கள் ஏகாதிபத்தியத்தினதும் ஏகாதிபத்திய சார்பு-அதிகாரித்துவ முதலாளித்துவத்தினதும் கொடுமையிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொள்வர்; ஏனெனில், நிலப்பிரபுத்துவத்துக்கெதிரான போராட்டம், மற்ற இரு எதிரிகளுக்கும் எதிரான போராட்டமும் ஆகும்.

## மிகச் சிறந்த புரட்சிகர நிலைமை

இன்று, உலகில் மிகச் சிறந்த புரட்சிகர நிலைமை காணப்படுகின்றது என்ற எமது கூற்றை, அண்மைக் காலங்களில் நிகழ்ந்த சர்வதேச அபிவிருத்திகள் உறுதிப்படுத்துகின்றன. உலகைப் பங்குபோட்டு அடிமைப் படுத்தும் தமது இழிவான முயற்சியில், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது பிரதான கைக்கூலிகளான சோவியத் திரிபுவாதிகளும் மென்மேலும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் தேசிய விடுதலைக்கான ஆயுதப் போராட்டங்கள் மென்மேலும் உக்கிரமடைந்து ஏகாதிபத்திய, ஆட்சியின் அத்திவாரத்தையே அழிக்கின்றன.

தொழிலாளி வர்க்கத்தினதும், விவசாய வர்க்கத்தினதும் போராட்டங்களின் புதிய எழுச்சி முதலாளித்துவ நாடுகளை கதிகலங்கச் செய்துள்ளது; பிற்போக்கு ஆளும் வர்க்கங்கள் உள்நாட்டில் தீர்க்க முடியாத முரண்பாடுகளுள் மூழ்கித் தவிக்கின்றன.

தொழிலாளி வர்க்கப் போராட்டத்துடன் இணைந்த, இனரீதியிலான அடக்கு முறைக்கு எதிரான ஆபிரிக்க—அமெரிக்க மக்களின் போராட்ட அலையானது, அமெரிக்காவில் ஏகபோகிகளின் ஆட்சிக்கு பலத்த அடியைக் கொடுத்து வருகின்றது. சோவியத் யூனியனால் தலைமை தாங்கப்படும் திரிபுவாதிகளும் பெரும் நெருக்கடிகளுக்கு முகங் கொடுக்க நேர்ந்துள்ளது. அவர்களால் ஆளப்படும் நாடுகளில் வாழும் மக்கள், முதலாளித்துவ மீட்புக்கும், தேசிய அடக்கு முறைக்கும் எதிராகவும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை மீண்டும் நிலை நாட்டுவதற்கும் கிளர்ந்தெழுந்துள்ளனர்.

மறு புறத்தில் சோஷலிஸ்ட் சீன சோஷலிஸ நிர்மாணத்தில் பல அற்புதங்களைச் செயலாக்கியுள்ளது. மகத்தான பாட்டாளிவர்க்க கலாச்சாரப்

குட்டி-முதலாளி வர்க்கமும் வளர்ந்துவரும் ஏழ்மைக்கும், வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் பலியாகிவருகின்றனர். எமது மக்களில் குறைந்தபட்சம், 95 விகிதத்தினர் தமது வறுமையையும், துயரத்தையும் மேலும் தாங்கமுடியாதவர்களாய், அடிப்படை மாற்றம் ஒன்றைக்காண விழைகின்றனர். அதே நேரத்தில், அமெரிக்க, சோவியத், பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளின் தலைவிதியுடன் தமது தலைவிதியை இணைத்துள்ள ஆளும் வர்க்கங்களின் பல்வேறு பகுதியினருக்கிடையிலும் கட்சிகளுக்கிடையிலும் ''இழுபறி'' சண்டை நடைபெற்று வருகிறது.

# புரட்சிப் பாதை

புரட்சி, வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உறுதிபெறச் செய்ததுடன், சோஷலிஸ்ட் மனிதன் உருவாவதற்கான நிலைமைகளையும் ஏற்படுத்தி விட்டது. கலாச்சாரப் புரட்சியின் வெற்றிகள், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்பதாவது தேசிய காங்கிரஸின் வெற்றியுடன் உச்சநிலையை எட்டியுள்ளன. தலைவர் மாஓவின் சிந்தனைக்குப் புதுபுது வெற்றிகள் கிடைத்து வருகின்றன. சர்வதேச வர்க்கப் போராட்டம் முன்னிலும் பார்க்க உக்கிரமடைந்துள்ளது. ஏகாதிபத்தியத்தினதும், சகல பிற்போக்கினதும் அழிவு நாள் அண்மிவிட்டது. உலக வரலாறு மாசேதுங் சிந்தனை யுகம் என்ற புது யுகத்திற்குள் புகுந்து விட்டது.

இந்தியாவில் புரட்சிகர நிலைமை அற்புதமாக உள்ளது என்ற எமது சரியான கூற்றை கடந்த 18 மாதங்களில் நடந்துள்ள சம்பவங்கள் நிரூபித்துள்ளன. இன்று, ஆளும் வர்க்கங்கள் முன்பிருந்ததை விட ஆழமான பொருளாதார அரசியல் நெருக்கடிக்குள் மூழ்கியுள்ளன. ஏகாதிபத்தியத்துக்கும் மக்களுக்கும் இடையிலும், நிலப்பிரபுத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையிலும், மூலதனத்துக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலும், ஆளும் வர்க்கங்களின் பல்வேறு பகுதியினருக்கு இடையிலும் காணப்படும் முரண்பாடுகள் நாளுக்கு நாள் கூர்மையடைந்து வருகின்றன. எமது விவசாய வெகுஜனங்கள் மீதான நிலப்பிரபுத்துவ விலங்கு இன்னும் உடைத்தெறியப்படாத காரணத்தாலும், அமெரிக்க-சோவியத் ஏகாதிபத்தியவாதிகளினல் தலைமைதாங்கப்படும் பல்வேறு ஏகாதிபத்திய வாதிகளினுலும் உள்நாட்டில் உள்ள அவர்களது கைக்கூலிகளினுலும் எமது மக்கள் கொடூரமாகச் சுரண்டப்படுவதாலும், தொழிலாளி வர்க்கமும், விவசாயி வர்க்கமும்

இந்தியாவின் சகல இடங்களிலும் தம்மீது கொடிய பாரமாக விளங்கும் நான்கு மலைகளையும் அகற்றுவதற்கு மக்கள் கடும் போராட்டங்களைத் தொடுத்து வருகின்றனர். அமெரிக்க ஏகாதிபத்தியம், சோவியத் சமூக - ஏகாதிபத்தி

# இந்திய கம்யூனிஸ்

யம், நிலப்பிரபுத்துவம், ஏகாதிபத்திய சார்பு - அதிகாரித்துவ முதலாளித்துவம் என்பவையே இம் மலைகளாகும்.

நக்ஸல்பாரியில் ஆரம்பமாகிய விவசாயிகளின் ஆயுதப் போராட்டம், இப்போது, சிறிகாகுளம், முஷகரி, லக்கிபுர் கேரி ஆகிய இடங்களுக்கும் பரவி, மேலும் புதுப்புது பிரதேசங்களுக்கும் பரவி வருகிறது. அண்மையில் கேரளத்தின் விவசாயப் புரட்சியாளர்கள் புரட்சிகர கிளர்ச்சியொன்றை நடத்தினர். ஆயுதங்களுடன் போராடக் கிளம்பியுள்ள நாகா, மிசோ, குக்கி இனத்தவர்களின் புரட்சிகரப் போராட்டங்கள் பிற்போக்கு ஆட்சிக்குப் பலத்த அடிகளைக் கொடுத்துள்ளன. கிராமப் புறங்களிலும், நகரப்புறங்களிலும் மக்களது எதிர்ப்பு வேகமாக வளர்ச்சிபெற்று, ஜனநாயகப் புரட்சியின் பிரதான உள்ளடக்கமாகிய விவசாயப் புரட்சியில் ஒருபுதிய எழுச்சியை ஏற்படுத்தி வருகிறது.

மக்கள் போராட்டங்களின் எழுச்சியைத் தடை செய்வதற்கு, பிற்போக்கு ஆளும் வர்க்கங்கள் கொடூரமான அடக்கு முறையைக் கையாள்கின்றனர். ஆயுதப் போராட்டங்கள் வெடித்துள்ள பகுதிகளுக்கு அவர்கள் இராணுவத்தையும் பொலிசையும் விரைந்தனுப்புகின்றனர். பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகம், கைது செய்யப்பட்டு வழக்கெதுவுமின்றி தடுத்து வைக்கப்படல் ஆகியவை நாளாந்த நிகழ்ச்சிகளாகி விட்டன. வர்க்

# ...றுப் பாதையை நிராகரிப்போம்

# ...தையை பின்பற்றுவோம்

## ...ம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)

## அரசியல் தீர்மானம்

கப் போராட்டங்களை நசுக்க, ஆளும் வர்க்கங்கள் நாளுக்கு நாள் பலவிதமான கடும் சட்ட அதிகாரங்களினுல் தம்மை ஆயுதபாணிகளாக்குகின்றனர். அதே நேரத்தில் மக்களைப் பிரிக்கவும், அவர்களது போராட்டங்களைக் குழப்பவும் சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. போராடும் மக்களின் ஐக்கியத்தைச் சீர்குலைக்க, இனவெறி, சாதி வெறி, பிரதேச வெறி போன்ற சகல வெறிகளும் மக்களுக்கு ஊட்டப்படுகின்றன. மக்களை ஏமாற்றவும், அவர்களது போராட்டங்களை நசுக்கவும், சோஷலிஸ்ட் சீனவுக்கும், பாகிஸ்தானுக்கும் எதிராக குறுகிய தேசிய வெறி பரப்பப் படுகின்றன. தேசிய ஐக்கியம் என்ற பெயரில் பல்வேறு இனங்களின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் ஹிந்தியைத் திணிப்பதற்கு ஆளும் வர்க்கங்கள் முயல்கின்றன. சகல இனங்களினதும், மொழிகளினதும் சமத்துவம் மறுக்கப்படுகின்றது.

புரட்சிகரப் போராட்டங்கள் மிக வேகமாக வளர்ந்து வரும் வேளையில் அவற்றை அடக்க ஆளும் வர்க்கங்கள் தீவிரமாக முயலும் போது திரிபுவாதிகளும், நவ-திரிபுவாதிகளும், ஏகாதிபத்தியவாதிகளினதும் உள்நாட்டு பிற்போக்குக் கும்பலினதும் கையாட்களாகச் செயல்பட முன்வந்துள்ளனர். ''போராட்டத்தின் சங்கமாக'' ''ஐக்கிய முன்னணி'' அரசாங்கங்களை முன்வைப்பதன் மூலமும், ''மக்களுக்கு நிவாரணமளித்தல்'' போன்ற சுலோகங்களை எழுப்புவதன் மூலமும், மக்களது புரட்சிகர உணர்வை மழுங்கடித்து புரட்சிகரப் பாதையில் இருந்து அவர்களைத் திசை திருப்புவதற்கு மக்களிடையே மயக்கத்தை ஏற்படுத்த முயல்கின்றனர். இந்த ''ஐக்கிய முன்னணி'' அரசாங்கங்கள், உள்ளடக்கத்தில், மக்களது சவாலுக்கு பிற்போக்கு ஆளும் வர்க்கங்களின் பதிலே ஆகும். ''புரட்சிக்காகிய வேளை இன்னும் உருவாகவில்லை,'' மக்கள் புரட்சி செய்ய இன்னும் தயாராக இல்லை,'' ஆயுதந்தரித்த கொரில்லாப் போராட்டம் என்றகோஷம் அதிதீவிரவாதக் கோஷமாகும்'' என நவ-திரிபுவாதிகள் ஊளையிட்டனர். வெளிநாட்டு, உள்நாட்டு பிற்போக்கின் கைகூலிகளாகிய இவர்கள் அல்லலுறும் மக்க

ளின் புரட்சிகர உணர்வை மழுங்கடித்து, மக்களின் கோபாக்கினியில் இருந்து தமது எஜமானர்களைக் காப்பாற்றவே முயற்சி செய்கின்றனர்.

### கட்சியில் இரு நெறிகளுக்கு இடையிலான போராட்டம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சரித்திரம், வர்க்கப் போராட்ட நெறிக்கும் வர்க்க சமரச நெறிக்கும் இடையிலான - போராட்டத்தினதும், பாட்டாளி வர்க்க புரட்சிகர நிலைகளுக்கும், முதலாளி வர்க்க பிற்போக்கு தலைமைப்பீடத்துக்கும் இடையிலான போராட்டத்தினது சரித்திரமாகும். கட்சியின் சரித்திரத்தைக் கூர்ந்து கவனித்தால், எமது மக்களின் புரட்சிகர மார்க்கத்துக்கு தலைமைப்பீடம் எப்போதுமே துரோகம் பண்ணி வந்தது புலனுகும். இந்திய சமுதாயத்தில் வர்க்கங்கள் பற்றியும், இந்தியப் புரட்சியில் அவை வகிக்கும் பாத்திரம் பற்றியும் யதார்த்தமான ஆராய்வு நடத்துவதற்கு புரட்சிகர மார்க்கத்தினுல் இயலாமல் போனமையினுல்தான் நம்பிக்கைத் துரோகிகளான தலைமைப் பீடத்தை தூக்கியெறிய அவர்கள் தவறினர் எனவும் அது தெளிவாகும்.

ஸ்டாலினுல் தலைமைதாங்கப்பட்ட சோவியத் மக்களின் மாபெரும் வீரத்துக்கு உதாரணமாக விளங்கிய பாசிஸ—எதிர்ப்புயுத்தம் வெற்றிபெற்றதும், தோழர் மாசேதுங் அவர்களது தலைமையில் சீன மக்கள் போராடி ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை தோற்கடித்ததும் பாசிஸ்ட் ஏகாதிபத்திய சக்திகள் தமது அழிவை நெருங்கியதுடன். ஏகாதிபத்தியமே பலவீனமடைந்தது. தோழர் மாசேதுங்கின் தலைமைப் பீடத்தின் கீழ் மகத்தான சீனப் புரட்சியின் உலகைக் குலுக்கிய வெற்றி கிழக்கில் ஏகாதிபத்திய முன்னணியை உடைத்ததுடன், உலகில் படைபல சக்தியின் நிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. ஜப்பானுக்கு எதிரான எதிர் தாக்குதல் யுத்தத்தின் போதுதான் தோழர் மாசேதுங்கின் மக்கள் யுத்தம் பற்றிய கோட்பாடு பூரணமாக அபிவிருத்தி செய்யப்பட்டது. அது ஒரு புதிய பாதையை—இந்தியா போன்ற காலனித்துவ அரை—காலனித்துவ நாடுகளில் வாழும் மக்கள் ஏகாதிபத்தியத்தினதும், உள்நாட்டுப் பிற்போக்குக் கும்ப

லினதும் கொடுமையிலிருந்து தம்மை விடுவிக்க வேண்டும் என்ற பாதையை வகுத்தது. ஆசியாவின் பல்வேறு நாடுகளில் புரட்சிகரப் போராட்டப் புயல் வீசியது. அங்கு, மக்கள் தலைவர் மாஓவினுல் வகுக்கப்பட்ட மக்கள் யுத்தம் என்ற பாதையைப் பின்பற்றினர். இந்திய மக்களின் அக்கினிக் கோபத்தை, ஏகாதிபத்திய ஆட்சிக்கெதிரான அவர்களது பரந்த வீரஞ்செறிந்த கிளர்ச்சியின்போது காணக் கூடியதாக இருந்தது. தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் இந்திய விவசாயிகள் ஆயுதப் போராட்டத்தில் குதித்தார்கள். புன்னப்புர—வயலார் விவசாயிகள் பிற்போக்கு ஆயுதப் படைகளை தீரமுடன் எதிர்த்தனர்; தெலுங்கானு விவசாயிகள் நிலப் புரபுக்களின் ஆட்சிக்கெதிராக ஆயுதத்துடன் கிளர்ச்சி செய்தனர்; வங்காளி விவசாயிகள் நிலப்பிரபுத்துவச் சுரண்டலை எதிர்த்து ''தெப்பக'' போராட்டத்தை நடத்தினர். நாடு முழுவதிலும் பாட்டாளி வர்க்க எழுச்சி காணப்பட்டது. பொலிஸ், இராணுவம், கடற்படை ஆகியவற்றின் மத்தியிலும் கூட இக் கிளர்ச்சி பரவியது. ஆனுல், திரிபுவாதத் தலைமைப் பீடம், ஏகாதிபத்திய வாதிகளினதும், உள்நாட்டுப் பிற்போக்காளர்களினதும் கைக் கூலிகளாக மாறி, மகத்தான இப் போராட்டங்களைக் காட்டிக் கொடுத்தனர். புரட்சிகர எழுச்சியைக் கண்டு அஞ்சிய ஏகாதிபத்தியம், இந்திய ஏகாதிபத்திய—சார்பு முதலாளித்துவத்தையும், நிலப்புரபுத்துவத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் காங்கிரஸுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்தனர். நாடு பிரிக்கப்பட்டது. ஏகாதிபத்தியவாதிகளின் நேரடி ஆட்சி அவர்களது மறைமுக ஆட்சியாக மாறியது. இந்தியாவின் சகல கட்சிகளுடனும் சேர்ந்து திரிபுவாதத் தலைமைப் பீடம் மக்களின் நம்பிக்கைக் குத் துரோகம் இழைத்தது.

படுமோசமான காட்டிக் கொடுப்புக்கு எதிரான நிலைகளின் கிளர்ச்சியை, கட்சியின் இரண்டாவது காங்கிரஸில் காணக் கூடியதாக இருந்தது. கட்சியின் தலைமைப் பீடத்தைக் கைப்பற்ற, ரணதிவே கும்பல் இந்தக் கிளர்ச்சியைப் பாவித்தது. தெலுங்கானுப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கிக்கொண்டிருந்த ஆந்திரப் பிராந்தியக் கமிட்டியின் செயலகம், சீனுவினுல் ஒளியூட்டப்பட்ட மக்கள் யுத்தப் பாதையை பின்பற்றுவதன்

மூலம் மட்டுமே இந்தியப் புரட்சி வெற்றிபெற முடியும் எனச் சரியாகச் சுட்டிக்காட்டியது. ரணதிவே கும்பல், ஆந்திரச் செயலகத்தின் சரியான இக் கணிப்பீட்டை எதிர்த்ததுடன், ஜனநாயகப் புரட்சியையும், சோஷலிஸ்ட் புரட்சியையும் ஒரே சமயத்தில் செய்துமுடிக்கலாம் என்ற ட்ரொட்ஸ்கிஸத் தத்துவத்தை முன்வைத்தனர். இவ்வாறு, இக் கும்பல், ஜனநாயகப் புரட்சியின் அடிப்படைப் பணியாகிய விவசாயப் புரட்சியிலிருந்து கட்சி நிலைகளின் கவனத்தைத் திசைதிருப்பினர், ஒருமுனைப்போக்கு கட்சி அங்கத்தவர்களை அதி தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடத் தூண்டியது. ரணதிவே கும்பல் இத்தகைய பிழையான தற்கொலைக் கொள்கையைப் பின்பற்றிய போதிலும், தெலுங்கானு விவசாயப் புரட்சியாளர்கள் போராட்டப் பாதையிலிருந்து விலகவில்லை. அவர்கள் கொரில்லா யுத்த முறைகளைக் கையாண்டு போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றனர். அணிகளின் கிளர்ச்சிக்கு முகங்கொடுக்க நேர்ந்த ரணதிவே கும்பல் ஒருமுனை வாத நெறியை கைவிட நேர்ந்தது. சர்வதேச தலைமைப் பீடம் தக்க சமயத்தில் குறுக்கிட்டமையே இதற்குக் காரணமாகும். ஆனுல் அதே துரோகக் கொள்கை, 1951ன் திட்டம் நிறைவேற்றப்பட்ட போது மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

இந்தியப் பெரும் முதலாளி வர்க்கம் இரட்டைத் தன்மை வாய்ந்தது என்ற விளக்கத்தின் அடிப்படையிலேயே 1951ல் திட்டமும், தந்திரோபாய நெறியும் வகுக்கப்பட்டன. இரட்டைத்தன்மை என்பதன் மூலம், இந்தியப் பெரும் முதலாளி வர்க்கத்துக்கு ஏகாதிபத்திய—எதிர்ப்புத் தன்மையும், அதே நேரத்தில் ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்யும் தன்மையும் உள்ளது என்றே கருதப்பட்டது. மறு வார்த்தையிற் கூறுவதானுல், பெரியதும், அதிகாரம் மிக்கதுமான இந்திய முதலாளி வர்க்கத்தை கட்சியின் துரோகத் தலைமைப்பீடம், தேசிய முதலாளி வர்க்கமாகக் கணித்தது. இந்தக் கணிப்பீட்டின்படியே திரிபுவாத தலைமைப்பீடம், இந்திய அரசை, சுதந்திர முதலாளி வர்க்க அரசு என விப

ரித்தது. இந்திய அரசாங்கம் நிலப்பிரபுக்களினதும், ஏகாதிபத்தியத்துடன் தொடர்புடைய பெரும் முதலாளி வர்க்கத்தினது அரசாங்கமாகும் என அவர்கள் கூறியபோதிலும், இந்தக் கூட்டில் பெரும் முதலாளி வர்க்கமே சக்தி வாய்ந்தது, அவர்களே இந்திய அரசை சுதந்திர முதலாளி வர்க்க அரசாகக் கட்டியமைக்கின்றனர் என்ற கொள்கையை முன்வைத்தனர். இந்தக் கொள்கையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட டாங்கே கும்பல் இந்தியாவில் நிலப்பிரபுத்துவம் மறைந்து விட்டதுடன், விவசாயத்தில் முதலாளித்துவம் அபிவிருத்தி பெற்றுவிட்டது என்ற அரசியல் நெறியை வகுத்தனர். இவ்வாறு, முற்போக்கு முதலாளி வர்க்கத்தினரின் பிரதிநிதி என நேரு வர்ணிக்கப்பட்டார். முதலாளி வர்க்கத்துடன் கூட்டுச் சேர்வதன் மூலம் இந்தியாவின் தேசிய ஜனநாயக அரசாங்கத்தை அமைக்க முடியும் என டாங்கே கும்பல் கருதிய படியால், அவர்கள் தாராளவாதக் கொள்கையை வகுத்தனர்.

அதே நேரத்தில், சோவியத் ''உதவி'' எந்த அளவுக்குக் கிடைக்கின்றதோ அந்த அளவுக்கு இந்தியச் சுதந்திரம் பாதுகாப்பாக இருக்கும் எனவும் போதித்தனர். அதாவது, ஏகாதிபத்திய ஆதிக்க வலையில் இருந்து மீள்வதற்கு சோவியத் 'உதவி' இந்தியாவுக்கு உதவியாக இருக்கும் மகத்தான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அனுபவத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளலாம். 1927ல், சியாங்கை ஷேக் கும்பல், ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் தொலைத்துக்கட்டிவிட்டு, சுதந்திர முதலாளித்துவ அபிவிருத்திப் பாதையில் செல்கின்றனர் எனவும் சீன ட்ரொட்ஸ்கிய வாதிகள் பிரகடனம் செய்தனர். வலதுசாரி சந்தர்ப்பவாதியான சென் து—சியு இந்த ட்ரொட்ஸ்கிய நெறியைப் பின்பற்றினுன். ஜனநாயகப் புரட்சி முற்றுப் பெற்றதும், சீனு சோஷலிஸ்ட் புரட்சிக் கட்டத்துள் புகுந்துவிட்டது என அவர்கள் கூறினுர்கள். அவர்கள் ''தேசிய சபையை நிறுவுக'' என்ற கோரிக்கையைக் கிளப்பியதுடன், புரட்சிகரப் போராட்டப் பாதையைக் கைவிட்டு சட்டரீதியான இயக்கங்களை வலியுறுத்தினர். அவர்கள் சகலவிதமான புரட்சிகரப் போராட்டங்களையும் எதிர்த்ததன் பயனுக கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

— தொடரும்

---

### அடித்தளத்திலிருந்து வேலை செய்யவேண்டும்

**ஆயிரக்கணக்கான தொழிலாளர்களையும், விவசாயிகளையும், புரட்சிகர புத்திஜீவிகளையும் தட்டி எழுப்பி அணிதிரட்டுவதில் நாம் வெற்றிகொள்ள வேண்டும். உடடினயான திடீர்ப் பலன்களை எதிர்ப்பார்க்காது மக்கள் மத்தியில் பல காலம் அடித்தளத்திலிருந்தே வேலை செய்வதன் மூலமே இதனைச் சாதிக்க முடியும்.**

— இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி

# சீனாமீது கைவைத்தால் ஆக்கிரமிப்பாளர்கள் பூரணமாக அழிக்கப்படுவர்

**சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 48 வது ஆண்டு நிறைவையொட்டி ''ஸெறி ஐ பொப்புலிற்'' எனும் அல்பேனிய பத்திரிகை எழுதிய ஆசிரிய தலையங்கத்தை இங்கு பிரசுரிக்கின்றோம்.**

**-ஆசிரியர்**

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 4 வது ஆண்டு நிறைவை, பெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந் நிகழ்வை சீன கம்யூனிஸ்ட்டுகளும், சகோதரத்துவ சீன மக்களும் கொண்டாடுகிறார்கள். சீன கம்யூனிஸ்ட் கட்சி அதன் போராட்டங்கள், புகழ்மிக்க புரட்சிகர நடவடிக்கைகளின் மூலம் தொழிலாளி வர்க்கத்திற்கும், உழைக்கும் விவசாயிகளுக்கும், ஏனைய சுரண்டப்பட்ட வெகுஜனங்களுக்கும் தனித் தலைவனாகவும், இவர்களுடைய அடிப்படை நலன்களின் உண்மையான பிரதிநிதியாகவும் இருந்து வருகிறது.

கடுமையான, நீண்ட கஷ்டமிகுந்த அதேநேரத்தில் சிறப்புமிக்க வெற்றிகளால் வாகை சூடிய யுத்தங்கள் நிரம்பிய அதனுடைய போராட்ட உணர்வுமிக்க பாதை, கட்சியின் ஸ்தாபகரும், தலைவரும், பெரும் மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டுமான தோழர் மாசேதுங்கினது பெயருடனும், வீரமிக்க அவரது பாத்திரத்துடனும் நேரடியாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வருடம், சீன மக்களால் ஆடம்பரத்துடனும்—புகழுடனும் கொண்டாடப்படவிருக்கும் புகழ்மிக்க 20வது ஆண்டு நிறைவு பெறும் மக்கள் சீன குடியரசை, ஆசியாவின் இதயத்தில் உருவாக்குவதற்கு, உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றிக்கு சீன கம்யூனிஸ்ட்டுகளையும், மக்களையும் சியாங்கை-ஷேக் கொள்ளைக் கூட்டத்திற்கும், ஜப்பானிய யுத்த வெறியர்களுக்கும், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கும் எதிரான ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் சுமார் முப்பதாண்டுகள் வரை தலைவர் மாசேதுங் வழிநடத்தினார். அத்தோடு, இந்த இருபது வருடங்களில் சீனாவில் சோஷலிஸப் புரட்சியினதும், சோஷலிஸ நிர்மாணத்தினதும் புதிய போர்களங்களிலும், அமெரிக்காவால் தலைமை தாங்கப்படும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும், சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலையும் அதனை தலைமையாக கொண்ட நவீன திரிபுவாதத்திற் கெதிராகவும், பல்வேறு நாடுகளின் பிற்போக்கு வாதிகளுக்கு எதிராகவும் எமது காலத்தின் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மாபெரும் போராட்டத்திலும் கட்சியையும், சீன மக்களையும் தோழர் மாசேதுங் வழி நடத்தினார். தற்போது, வெற்றிப் பாதையில் இட்டுச் செல்கிறார். இந்தவெற்றிகரமானபோராட்டங்களில் சீன கம்யூனிஸ்ட் கட்சி புடம் போடப்பட்டு பலப்படுத்தப் பட்டதுடன், ஒரு உலகரீதியான புரட்சியினதும், சோஷலிஸத்தினதும் வெற்றிக்கான, மார்க்சிஸம்-லெனினிஸத்தின் வெற்றிக்கான போராட்டத்தில் மிகப் பெரிய மோதும் படையாக உருவாகிவிட்டது.

### துரோகிகள் அம்பலப்படுத்தப்பட்டனர்

அதனுடைய போராட்ட உணர்வுள்ள வெற்றிகரமான முன்னேற்றத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சி ஒரு அரை நூற்றாண்டாக, திசைதிருப்பிகளுக்கும், சகல விதமான விரோதிகளுக்கும் எதிராக ஒரு உக்கிரமான, தளராத, விட்டுக் கொடுக்காத போராட்டத்தை நடத்தியுள்ளது. இது, இரு மார்க்கங்களுக்கும், இரு வர்க்கங்களுக்கும் இடையிலுள்ள ஒரு போராட்டமாகவும், விரோதிகளின் வலதுசாரி அல்லது ''இடதுசாரி'' சந்தர்ப்பவாத மார்க்கங்களுக்கு எதிராக தலைவர் மாஓவின் மார்க்சிஸ—லெனினிஸ மார்க்கத்தின் ஒரு போராட்டமாகவும் இருக்கின்றது. இந்த போராட்டத்தின் நோக்கம் பெரிய, அடிப்படைப் பிரச்சினையை தீர்ப்பதாகும். சீனா எந்தப் பாதையில் முன்னேற வேண்டும், முதலாளித்துவ பாதையிலா அல்லது சோஷலிஸப் பாதையிலா? கட்சியின் விரோதிகள் புரட்சியை சீரழிப்பதற்கு பாடுபட்டதுடன் சீன புரட்சிக்கு தலைமைதாங்கும் உரிமையை பாட்டாளி வர்க்கத்திற்கு அளிக்க மறுத்தனர். அவர்கள் சீர்திருத்தவாதத்தையும், சரணாகதிவாதத்தையும் கடைப்பிடித்தனர். அவர்கள் சோஷலிஸப் புரட்சியையும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தையும் எதிர்த்தனர். அவர்கள் முதலாளித்துவ, திரிபுவாதப் பாதையைக் கடைப்பிடித்தனர். ஆனால், தோழர் மாசேதுங்கினால் தலைமைதாங்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி அதனுடைய விரோதிகளை, குறிப்பாக மூன்று மிகப்பெரும் ஆபத்தான, சென் ரூ—ஷியு, வாங் மிங், லியு ஷாஓ—சி ஆகியோரின் துரோகக் கும்பல்களை அம்பலப்படுத்தி, தகர்த்தது.

தலைவர் மாஓவின் மார்க்சிஸ—லெனினிஸ புரட்சி மார்க்கத்தையும், மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் தீர்மானமளிக்கின்ற வெற்றியையும் உறுதிப்படுத்திய, கட்சியின் வரலாற்றில் ஒரு ஒளியுள்ள பக்கத்தில் எழுதிய சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 9வது தேசிய மாநாட்டின் முக்கியமான தீர்மானங்களினால் உருவாக்கப்பட்ட புரட்சிகர உற்சாகத்தினதும், திட நம்பிக்கையினதும் மிகச் சிறந்த சூழ்நிலையில் தமது கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபிதத்தின் 48வது ஆண்டை சகோதரத்துவ சீன மக்கள் கொண்டாடிக்கொண்டிருக்கின்றார்கள்.

### உயிரோட்டம்

இந்தப் புரட்சியின் வெற்றி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் நிலைமைகளில் கட்சியை கட்டிவளர்த்து உறுதிப்படுத்துவதற்கான அரும் பெரும் அனுபவத்தைக் கொடுத்துள்ளது. ''கட்சி ஸ்தாபனம் பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சியடைந்த பகுதிகளைக் கொண்டதாக இருக்க வேண்டும்; அது வர்க்க

## அல்பேனிய - சீன மக்களினது நட்புறவும் போராட்ட உணர்வுள்ள ஐக்கியமும் மேலும் பலப்படும்

விரோதிக்கு எதிரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்திற்கும் புரட்சிகர வெகுஜனங்களுக்கும் தலைமை தாங்கக்கூடிய ஒரு முன்னணிப் படை ஸ்தாபனமாக இருக்க வேண்டும்'' என்ற தலைவர் மாஓசேதுங்கின் பணித்தல், பாட்டாளி வர்க்கத்தின் ஒரு முன்னணிப் படையாக கட்சியை ஒருமுகப்படுத்தி கட்டி வளர்ப்பதற்கான அரசியல் திசைமார்க்கமாக வந்துவிட்டது. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 9வது தேசிய மாநாட்டினால் ஏகமனதாக ஏற்கப்பட்ட புதிய கட்சிச் சட்டதிட்டம், தலைவர் மாஓவின் விவேகமான தலைமையை வெகுஜனங்களுடன் இணைத்ததின் விளைவாகவும், ஜனநாயக மத்தியத்துவத்தினதும், கட்சியின் வெகுஜன மார்க்கத்தினதும் ஒரு உயிரோட்டமான தோற்றமாகவும் இருக்கின்றது. கட்சியின் சட்டதிட்டத்தை அமுல்படுத்துவது, சிந்தனையினதும் செயல்பாட்டினதும் இரும்புபோன்ற ஐக்கியத்துடன் கட்சியை இன்னும் அதிக பலமுடையதாகவும் அதிக போராட்ட உணர்வுள்ளதாகவும் செய்யும்.

வரலாற்றில் முன்னெப்பொழுதுமில்லாத, தோழர் மாசேதுங்கினால் விவேகத்துடனும் தூரதிருஷ்டியுடனும் அடியெடுப்பு செய்யப்பட்டு, வழி நடத்தப்பட்ட மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி, படுதுரோகியும் கருங்காலியுமான லியு ஷாஓ—சியினால் தலைமைதாங்கப்பட்ட தீய கோஷ்டியில் எதிர்ப்—புரட்சிச் சதியை தகர்த்ததுடன், கட்சியை சீரழிக்கும் உள்ளுக்குள் இருந்தே சீனாவின் கோட்டை அரணைக் கைப்பற்றும் ஏகாதிபத்தியத்தினதும், திரிபுவாதத்தினதும், பிற்போக்கினதும் கனவுகளையும் திட்டங்களையும் தவிடுபொடியாக்கிவிட்டது. இந்தப் புரட்சியின் தீர்மானமளிக்கின்ற வெற்றி பூர்ஷுவா, திரிபுவாத சீரழிவின் ஆபத்திலிருந்து கட்சியையும் மக்கள் சீன குடியரசையும் காப்பாற்றிவிட்டது. அது சீனாவை என்றென்றும் சிவப்பாக இருக்கச் செய்ததுடன், உலகில் புரட்சியினதும், சோஷலிஸத்தினதும் மிக சக்தி வாய்ந்த கோட்டை அரணாக சீனாவை நூறு மடங்குகள் பலப்படுத்திவிட்டது.

### புரட்சியிலும், உற்பத்தியிலும் சிறப்பான வெற்றிகள்

புரட்சியிலும் உற்பத்தியிலும் குறிப்பாக கடந்த மூன்று ஆண்டுகளில் மிகச் சிறப்பான வெற்றிகள் ஈட்டப்பட்டன. கட்சியினுடைய ஸ்தாபிதத்தின் இந்த வருடாந்தரத்திலும், அதன் உதயத்தின் 20 வது வருடாந்தரத்தின் வாசற்படியிலுமுள்ள மக்கள் சீன குடியரசு, நவீன கைத்தொழிலுடனும் முன்னேற்றமடைந்த விவசாயத்துடனும், பாட்டாளி வர்க்க, புரட்சிகர கலாச்சாரத்துடனும், முன்னேற்றமடைந்த உலக மட்டத்தின் மிக உயரமான சிகரங்களை நோக்கி துரிதமாக விஞ்ஞானம், தொழில் நுட்பத்துடன் முன்னேறிக்கொண்டிருக்கின்றது. அதைத் தொடத் துணியும் எந்த ஆக்கிரமிப்பாளனோ அல்லது ஆக்கிரமிப்பாளர்களின் கூட்டணியோ அவர்களை எச் சூழ்நிலைமைகளின் கீழும் எந்த நேரத்திலும் அழித்தொழிக்கக்கூடிய ஒரு பிரமாண்டமான வலிமையுள்ள, பாதுகாப்புள்ள ஒரு சக்திவாய்ந்த சோஷலிஸ சாம்ராஜ்யமாக வந்துவிட்டது.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 9வது தேசிய மாநாடு புரட்சியினதும், சோஷலிஸத்தினதும் உன்னத செம்பதாகையை இன்னும் மிக உயரத்திற்கு மேன்மையுடன் உயர்த்திவிட்டது. மகத்தான மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டான தோழர் மாசேதுங்கின் வெற்றிகரமான கருத்துகளின் அடிப்படையில் அதனுடைய சிந்தனையினதும் செயற்பாட்டினதும் ஐக்கியத்தையும் அதேபோல கட்சியையும் அது மேலும் பலப்படுத்தியுள்ளது. வீரமிக்க சீன கம்யூனிஸ்ட் கட்சி இந்த மாநாட்டிலிருந்து சித்தாந்தரீதியாக மிகப் பலமுடையதாக, வர்க்கப் போராட்டத்தின் அலைகளில் அதிகம் புடம்போடப்பட்டதாக, அதிகம் சுத்திகரிக்கப்பட்டதாக, தோழர் மாசேதுங்கினால் தலைமைதாங்கப்பட்ட பாட்டாளி வர்க்க புரட்சிகர தலைமையைச் சுற்றி அதிகமானளவு ஐக்கியப்பட்டதாக உதித்துவிட்டது. இந்த மாநாட்டின் மிகமுக்கியமான தீர்மானங்களும், அதனுடைய மேன்மையான ஸ்தாபகரும், புரட்சியின் யுத்த உபாய மேதையும், சிறப்பு வாய்ந்த மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டுமான தோழர் மாஓசே துங் கட்சியின் தலைவராக ஏகமனதாக தெரிவுசெய்தமையும், தோழர் லின் பியௌவை கட்சியின் உதவி தலைவராக தெரிவுசெய்தமையும், உக்கிரமான வர்க்க போராட்டங்களிலும் மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் தீஜுவாலைகளிலும் சோதனைக்குள்பட்ட புரட்சிவாதிகளைக் கொண்ட புதிய மத்திய கமிட்டியை தெரிவு செய்தமையும், தமது கம்யூனிஸ்ட் கட்சியினால், வழிகாட்டப்படுகின்ற மகத்தான சீன மக்கள் புரட்சியினதும், சோஷலிஸத்தினதும் புகழ்மிக்க பாதையில் இன்னும் அதிக துரிதமான பெரும் வேகங்களில் எந்நேரமும் வெற்றிகரமாக முன்னேறிச் செல்வார்கள் என்பதற்கு ஒரு நிச்சயமான உத்தரவாதமாக இருக்கின்றது. இந்த காங்கிரஸின் சாசனங்கள் ஒரு மிக மதிப்புள்ள பொக்கிஷமாகவும், மார்க்சிஸம்—லெனினிஸத் தத்துவத்திற்கும், நடைமுறைக்கும் ஒரு பெரும் வெகுமதிப்புள்ள பங்காகவுமிருக்கின்றது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் நிலைமைகளில் புரட்சியை தொடர்ந்து நடத்துவது பற்றிய தோழர் மாஓசேதுங்கின் கருத்துக்கள் உள்ளடக்கத்தில் அதிக செழுமையுடைய ஒரு புதிய அனுபவமாகவும் மார்க்சிஸம்— லெனினிஸத்திற்கு பெரும் மதிப்புள்ளதாகவுமிருக்கின்றன.

### மாசேதுங் சிந்தனையால் போதிக்கப்பட்ட சீன கம்யூனிஸ்ட் கட்சி

புகழ்மிக்க சீன கம்யூனிஸ்ட் கட்சி அதனுடைய முழு 48 வருடகால நடவடிக்கையில் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துவ கோட்பாடுகளுக்கு உண்மையுடையதாக எந்நேரமும் தொடர்ந்திருந்துள்ளது.

7-ம் பக்கம் பார்க்க

# நீண்ட பயணம்

**எதிரியை ஏமாற்றிவிட்டு, ஹூனன், வீசௌவின் பெருந் தெருவின் ஊடாக முன்னேறிச் சென்றோம். நாளொன்றுக்கு 120 லீ மைல்களுக்கு அதிகவேகமாக நாம் முன்னேறினோம். வீசௌவின் மேற்குப்பிரதேசத்திலிருந்த பல சிறு நகரங்களைக் கைப்பற்றிக்கொண்டு பீபன் ஆற்றை அடைந்தது செஞ்சேனை. ஏப்ரல் மாதக் கடைசியில் யுன்னானுக்குள் பிரவேசிப்பதற்காக செஞ்சேனை முப்பிரிவாகப் பிரிக்கப்பட்டது. எதிரியைத் தடுத்து நிறுத்துவதற்காக ஒன்பதாவது படைப்பிரிவை வுக்கியாங் ஆற்றின் வடபகுதியில் விட்டுச் சென்றோம்.**

அளித்த வண்ணம் பின்னால் வந்து கொண்டிருந்தது.

தொண்டர்படை சிங்சா ஆற்றைக் கடந்து எதிரியைத் தாக்கி ஒரு படைப் பிரிவை நிர்மூலமாக்கியது. சியாகோ ஆற்றுப்பாதையின் இரு பகுதிகளையும் இப் படைகள் கைப்பற்றியதோடு ஏழு பாதைப் படகுகளையும் கைப்பற்றியது. படையின் முக்கிய பகுதி 30லீக்களுக்கு அப்பாலிருந்த மேட்டுக் கரையோரமாக கலவரமடைந்து பின் வாங்க நேரிட்டது. சியாங் கை-ஷேக் செஞ்சேனையின் தந்திரோபாயங்களின் மாற்றங்களை அறிந்து கொண்டான். வியாங்கில் அவனது படை தளகர்த்தர்களின் கூட்டமொன்றைக் கூட்டி எமது தந்திரோபாயங்களை ஆராய்ந்து எம்மை வெல்வதற்கான திட்டங்களையும் வகுத்தான். செஞ்சேனை தனது படைப்பிரிவுகளை எதிரியிடமிருந்து செஞ்சேனை தப்பிச் சென்றது— செஞ்சேனையின் யுத்த தந்திரோபாயத்தில் இது வோர் மிக முக்கிய வெற்றியாகும். செக்கு அன்னிலுள்ள ஹூயிலியில் ஐந்து நாட்கள் தங்கிவிட்டு செஞ்சேனை மீண்டும் வடக்கு நோக்கித் தனது பயணத்தைத் தொடங்கியது. சிசாங், லுக்கு ஆகிய பிரதேசங்களைக் கடந்து யி மக்கள் அதிகமாக வசிக்கும் பிரதேசத்தை செஞ்சேனை அடைந்தது.

## எதிரியின் சுற்றிவளைப்பை தகர்த்து முன்னேறியது செஞ்சேனை

செஞ்சேனையை சுற்றிவளைப்பதற்காகப் பின் தொடர்ந்த ஐந்து எதிரிப்படைப் பிரிவை இந்த படைப்பிரிவு முறியடித்து விட்டு, யுன்னானுக்குள் பிரவேசித்து சுஅன் வேயைக் கைப்பற்றியது. மற்ற இரு படைப் பிரிவுகளும் செஞ்சேனையின் முக்கியப்படைகள் சன்லி, மலுஸ், சுன்தியன், சுங்மிங், ஆகியவற்றைக் கைப்பற்றியதோடு தலைநகரான குன்மிங்கைத் தாக்கி கைப்பற்ற முயன்றன. அதேவேளை கோமிங்ராங்கின் யுன்னான் படையின் முக்கிய பிரிவு வீசௌவிற்கு மாற்றப்பட்டது. இதனால் அந்த மாகாணம் பாதுகாப்பற்று இருந்தது. எனவே, எமது படைகள் யுன்னானுக்குள் பிரவேசித்த போது கோமிங்ராங் கவர்னர் திகிலடைந்தான். குன்மிங்கைப் பாதுகாப்பதற்காகப் பல்வேறு தமது பிற்போக்கு படைப்பிரிவுகளை அவன் அவசர அவசரமாக அணிவகுத்தான். தாக்குதல் தொடுக்கப் போவவதாக எதிரியை ஏமாற்றிவிட்டு செஞ்சேனை சிங்சா ஆற்றை நோக்கி வட மேற்காகச் சென்றது.

கொந்தளித்துச் செல்லும் பெருநதியான சிங்சா ஆறு லுக்கு சுன் - யுன்னான் எல்லையோரமாய் பாய்கின்றது. ஆற்றைச் சுற்றியுள்ள பிரதேசம் மிக முக்கிய கேத்திர ஸ்தானமாகும். ஆற்றைக் கடந்து செஞ்செனை செல்லாவிட்டால் எதிரியினால் பள்ளத்தாக்கில் சுற்றிவளைக்கப்பட்டு நிர்மூலமாகப் படும் அபாயத்திற்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை செஞ்சேனைக்கு ஏற்பட்டது. எமது நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக சியாங் கை-ஷேக்கின் விமானங்கள் அப்பிரதேசத்தைச் சுற்றி ஒவ்வொரு நாளும் பறந்து கொண்டிருந்தன. இதனால், நேரத்தோடு போராட வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டது. இரவுகளில் பயணத்தை நடத்தி செஞ்சேனை சிங்சா ஆற்றை மூன்று பக்கங்களாக வந்தடைந்தது. முதலாவது படைப் பிரிவு லுங்சி ஆற்றுப் பாதையின் மூலமாகவும், மூன்றாவது பிரிவு ஹூங்மென் ஆற்றுப் பாதையின் மூலமாகவும், தொண்டர் படை சியாகோ ஆற்றுப் பாதையின் மூலமாகவும் வந்தடைந்தன. ஐந்தாவது படைப் பிரிவு வழமை போல் இவற்றிற்கு பாதுகாப்புடுப் பிரதேசத்தை நேரக்கி விரைந்தன. ஆற்றின் வடபகுதியிலிருந்த பயங்கரமான பள்ளத்தாக்கைக் கடந்து சென்று செக்குஅன்னிலிருந்து வந்த எதிரிப்படைகளை சிதறடித்தது. ஹூங்மென் ஆற்றுப் பாதையில், ஆறு அமைதியாகப்பாய்கிறது. லுங்சி ஆற்றுப் பாதையில் ஆறு அகலமாக உள்ளது. இவ்விடங்களில் எதிரியின் விமானங்கள் மிகத் தாழ்வாகப் பறந்து எமது படைகள் ஆற்றைக் கடந்து செல்வதற்கு இடையூறு செய்ய முடியும். எனவே, ஐந்தாவது படைப் பிரிவின் பாதுகாப்பில் முதலாவது, மூன்றாவதுபடைப் பிரிவுகள் ஆற்றைக் கடப்பதற்காக சியாகோ ஆற்றுப் பாதைக்கருகில் வந்தன.

மூன்று நாட்களுக்குப் பின்னர் எதிரியின் ''எதற்கும் துணிந்த'' 13வது படையிலுள்ள ஆறு சிறு பிரிவுகள் செஞ்சேனையை துரத்திக் கொண்டு சியாகோ ஆற்றுப் பாதையை அடைந்தன. ஆனால், ஐந்தாவது படைப் பிரிவு அவர்களைத் துரத்தியடித்தது. எனவே, எதிரியின் படைகள் சிங்சா ஆற்றின் மிருந்து பாதுகாப்பதற்கான திட்டங்களை வகுத்தது.

''நீண்ட பின் தொடரல், நன்கு திட்டமிட்டு தாக்குதல்'' என்ற தந்திரோபாயத்தை எதிரிகள் கடைப்பிடிக்கத் தீர்மானித்தனர். கோமிங்ராங்கின் 13வது படைப் பிரிவு தமது படைப் பகுதியிலிருந்து வெகுதூரம் தள்ளியிருந்தாலும் ஏற்கனவே ஏற்பட்ட நிகழ்ச்சிகளினால், திகிலடைந்ததாலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கத் துணிவில்லாமல் து அன்சி சியிலேயே தங்கியிருந்தது. எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய ஏழு படகுகளின் துணையைக் கொண்டு ஒன்பது இரவுகள், ஒன்பது பகலில் சியாகோ ஆற்றுப் பாதையூடாக சிங்சா ஆற்றை செஞ்சேனை கடந்தது. பத்தாவது நாள் எதிரிப்படைகள் வந்தபோது, நாம் எவ்வளவோ தூரம் முன் சென்று விட்டோம். கைப்பற்றிய படகுகளையும் நிர்மூலமாக்கிவிட்டு செஞ்சேனை முன்னேறியது.

செஞ்சேனையை சுற்றிவளைக்க முயற்சித்த அல்லது அதைப் பின்தொடர்ந்து வந்த ஆயிரக் கணக்கான கோமிங்ராங் துருப்புகளின் பிடியிலி

தோழர் மாசேதுங் வகுத்த கொள்கையின்படி குச்சி இன மக்களின் தலைவர்களுடன் கூட்டுச் சேர்ந்ததோடு, லாலூவு இன மக்களை நடுநிலைமையான வர்களாக்கினோம். ஆனால், சியாங்கை-ஷேக்கின் இரகசிய ஏஜண்டுகளினால் தூண்டிவிடப்பட்ட லோகுங் இன மக்களுடன் எமக்கு சிறிது தொல்லை ஏற்பட்டது. அவர்கள் எம்மை தொடர்ந்து தாக்கினர். தேசிய சிறுபான்மையினரை விடுதலையடையச் செய்வதே எமது கொள்கை என்பதை பல தடவை நாம் அவர்களுக்கு விளக்கிக் கூறினோம். சிறுபான்மையின மக்களைப்பற்றி நாம் கடைப்பிடித்த இக் கொள்கைகளினால் செஞ்சேனை யி பிரதேசத்தினூடாக எதுவித தொல்லையுமின்றி முன்னேறிச் சென்றது. பின்னர் டாடு ஆற்றின் தெற்குப் பிரதேசத்திலிருந்த அன் தன் சாங் ஆற்றுப் பாதையை அடைந்தது.

இங்குதான், தைப்பேயிங் சுவர்க்க இராஜ்யத்தின் ஷிடா—கேயின் படை டாடு ஆற்றைக் கடந்து வடக்கு நோக்கிச் செல்ல இயலாததினால் இறுதியாக முறியடிக்கப்பட்டது. 50 லீக்களுக்கும் அதிகமாக நீண்டு உயர்ந்த மலைகளுக்கிடையேயுள்ள பள்ளத்தாக்கினூடாக இந்த டாடு ஆறு பாய்கிறது. இங்கு எந்த வித யுத்த தந்திரோபாயங்களையும் பாவிக்க முடியாது. சுதந்திரமாகப் படைகளை உபயோகிக்கவும் முடியாது. எதிரி ஒளிந்திருந்து தாக்கி செஞ்சேனையை அழிக்கும் அபாயத்திற்கு முகம்கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது.

— தொடரும்

## சீனு மீது கைவைத்தால் ஆக்கிரமிப்பாளர்கள் பூரணமாக..

◎ 6-ம் பக்கத் தொடர்

இந்த வரலாற்று உண்மை 9வது கட்சி மாநாட்டில் ஒரு புதிய சக்தியுடன் வெளிப்படுத்தப்பட்டது. ''சிறந்த முதல்வர் தலைவர் மாஓவினால் பேணி வளர்க்கப்பட்ட சீன கம்யூனிஸ்ட் கட்சி பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை எந்நேரமும் கடைப்பிடித்துக் கொண்டு, முழு உலகத்தின் பாட்டாளி வர்க்கத்தினதும், அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களதும், தேசங்களதும் புரட்சிப் போராட்டங்களை உறுதியாக ஆதரிக்கின்றது'' என்ற இந்த மாநாட்டின் பிரகடனம், ஏகாதிபத்தியத்திற்கும் திரிபுவாதத்திற்கும், பிற்போக்கிற்கும் எதிரான போராட்டத்தை எந்நேரமும் விரிவுபடுத்தி முன்கொண்டு செல்வதிலும், புரட்சியினதும், மார்க்சிஸம்—லெனினிஸத்தினதும் லட்சியத்தின் வெற்றிக்காகவும் சகல கம்யூனிஸ்ட்டுகளினதும்புரட்சிகர மக்களினதும் சக்திகளை ஊக்கப்படுத்தி, உத்வேகப்படுத்தி பலப்படுத்துகின்றது. தோழர் அன்வர் ஹோஜா கூறியுள்ளார்: ''சீன கம்யூனிஸ்ட் கட்சியும், மக்கள் சீன குடியரசும், பிரபல்யமான மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் தோழர் மாசேதுங்கும் இருப்பது சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்திற்கும், சகல மக்களுக்கும் ஒரு பெரும் அதிர்ஷ்டமாக இருக்கின்றது. ஏகாதிபத்தியத்தினதும், திரிபுவாதத்தினதும், சகல பிற்போக்குவாதிகளினதும் நோக்கங்கள் வெற்றிபெறும் வழியில், மிகச் சக்திவாய்ந்த, தாண்டிச் செல்லமுடியாத தடைக்கல்லாக அவை வந்துவிட்டது. வரலாற்று நன்மையை அவை வைத்திருப்பதுடன், அவர்களுடைய குற்றமுள்ள திட்டங்களுக்கு மிக பலமான அடிகளைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றன.''

### பிற்போக்காளர்கள் அலறுகின்றனர்

புரட்சியிலும், உற்பத்தியிலும் சீன மக்களதும், அவர்களுடைய கம்யூனிஸ்ட் கட்சினதும் சிறப்புமிக்க வெற்றிகள், உலகுப் புரட்சியினதும், சோஷலிஸத்தினதும் லட்சியத்திற்கான போராட்டத்திற்கு, அவர்களுடைய பிரமாண்ட பங்கும், மார்க்சிஸ - லெனினிஸ்டுகளதும், சகல புரட்சிகர ஏகாதிபத்திய விரோத சக்திகளின் பாராட்டைப் பெற்றதுடன் அவர்களை - அளப்பரியளவு மகிழ்ச்சியுறச் செய்துள்ளது. அவைகள் விரோதிகளுக்கும், ஏகாதிபத்திய வாதிகளுக்கும், திரிபுவாதிகளுக்கும், அச்சத்தைக் கொடுக்கின்றன, கோபமூட்டுகின்றன. மாஸ்கோவில் துரோகிகளினதும், கழுத்தறுப்பவர்களதும் கேலிக் கூத்தின்போது சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும், சீன மக்களுக்கும் எதிரான திரிபுவாதி பிரஷ்னேவினதும்அவனுடைய அடிவருடிகளினதும் வெறித்தனமான கூக்குரல்களும், தாக்குதல்களும், சீன எல்லையில் சோவியத் திரிபுவாதிகள் வேண்டுமென்றே செய்த ஆத்திரமூட்டல்களும், சீனவை ''தீயினால் சுற்றிவளைத்த'' லுக்கான புதிய அமெரிக்க - சோவியத் கூட்டு ஒத்துழைப்பு சதித் திட்டங்களும், சீன மக்களதும் புரட்சியினதும், சோஷலிஸத்தினதும் விரோதிகளின் நோக்கங்களை தெளிவாகக் காட்டுகின்றன. அதே வேளை, இந்த விரோதிகளின் சகல சதிகளும் மாற்ற முடியாத தோல்விகளின் அதே விதிக் கூட்டாக காத்துக்கிடக்கின்றன. புரட்சிக்கும், சோஷலிஸத்திற்கும், கம்யூனிஸத்திற்குமான போராட்டத்தில் 70 கோடி சீன மக்களின் விஸ்வசக்தியான புகழ்மிக்க சீன கம்யூனிஸ்ட் கட்சியை உலகத்திலுள்ள எந்த சக்தியினாலும் இடையூறு செய்ய முடியாது.

### இதயபூர்வமான வாழ்த்துக்கள்

சீன கம்யூனிஸ்டுகளுடனும், மக்களுடனும் ஒரு தகர்க்கமுடியாத நட்புறவினால் பிணைக்கப்பட்ட அல்பேனிய கம்யூனிஸ்ட்டுகளும் எமது முழு மக்களும் புகழ் மிக்க சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபிதத்தின் இந்த வருடாந்தரத்தின்போது இதயபூர்வமான புரட்சிகர வாழ்த்துக்களை அவர்களுக்கு அனுப்புகின்றார்கள். புரட்சிக்கும் சோஷலிஸத்திற்குமான போராட்டத்தில், மார்க்சிஸம் - லெனினிஸத்தின் வெற்றிக்கான போராட்டத்தில் வீரமிக்க சீன கம்யூனிஸ் கட்சியுடன்தோளோடு தோள்சேர்ந்து போராடிக்கொண்டிருக்கிறோம் என்பதில் நாம் பெருமையடைகின்றோம். சீன கம்யூனிஸ்ட்டுகளுடனும் சகோதரத்துவ சீன மக்களுடனும் மகத்தான நட்புறவையும் போராட்ட உணர்வுள்ள ஐக்கியத்தையும் அல்பேனிய கம்யூனிஸ்டுகளும் எமது முழு மக்களும் தொடர்ந்து பாதுகாத்து எப்பொழுதையும் விட அதிகமாக பலப்படுத்துவோம். இந்த நட்புறவும் ஐக்கியமும் தகர்க்க முடியாதவை. ஏனென்றால், தோழர் ஹன்வர் ஹோஜாவினாலும், தோழர் மாசேதுங்கினாலும் தலைமைதாங்கப்படும் எமது மார்க்சிஸ - லெனினிஸ கட்சிகளால் அவைகள் பிணைக்கப்பட்டவை ஏனென்றால், மார்க்சிஸம்-லெனினிஸத்தினதும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தினதும் எல்லாவற்றையும் வெல்லும் போதனைகளை ஒரு உறுதியான அடிப்படையை அவை கொண்டுள்ளன. வீரமிக்க சீன கம்யூனிஸ் கட்சி ஸ்தாபிதத்தின் இந்த வருடாந்தரத்தின் போது, தோழர் மாசேதுங்கினால் தலைமை தாங்கப்படும் கட்சியின் தலைமையின் கீழுள்ள சீன கம்யூனிஸ்டுகளுக்கும் முழு சகோதரத்துவ சீன மக்களுக்கும் சோஷலிஸப் புரட்சியிலும், சோஷலிஸ நிர்மாணத்திலும் புதிய இன்னும் அதிக சிறப்பான வெற்றிகளை ஈட்டி மகத்தான மக்கள் சீனத்தை இன்னும் அதிக வலிமைமிக்க கோட்டை அரணாக, மாற்றி, உலகத்தில் புரட்சியைத் துரிதப்படுத்த வேண்டுமென இதயபூர்வமாக நாம் வாழ்த்துகின்றோம்.

◎ 2-ம் பக்கத் தொடர்

கப்பட்ட போது கவனயீனம் கையாளப்பட்டுள்ளது வருந்தத் தக்கது. அவர்களின் வேலை நிலைமைக்கும், ஆரோக்கியத்திற்கும் உகந்த முறையில் தீர்மானிக்கப்படவில்லை. காலதாமதமில்லாமல் இந்த குறைப்பாட்டைத் தீர்த்து கடைநிலை ஊழியர்களுக்கு திருப்தியான சம்பளத்தை கொடுக்க வேண்டும் என இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டார்கள்.

இ. போ. ச. தலைவர் ஒ. ஆர். பி. விஜயசேகரா, தோழர் சமல் த சில்வாவின் ஆலோசனைகளை மிகக் கவனமாகக் கெட்டதாகவும், அவர் சமர்ப்பித்த கோரிக்கைகளை இ.போ.ச.வில் தான் சமர்ப்பிப்பதாகவும், மூன்று மாதத்தில் இப்பிரச்சினைகளைத் தீர்க்க முயலுவதாகக்குறிப்பிட்டார்.

இ. போ. ச. கூட்டுக் கமிட்டிக் கூட்டத்தில், இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் தலைவர்: தோழர் சமல் த சில்வா, உப தலைவர்; ஏ. ஏ. ஜயசேன, ஸ்தாபன அமைப்புச் செயலாளர்: பி. எச். கே. த சில்வா ஆகிய தோழர்கள் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டார்கள்.

குத்தகை - கூலி விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்க

# நெற்காணிச் சட்டத்தை திருத்து

1. ஆயிரக்கணக்கான ஏழை விவசாயிகள் நிலமற்ற நிலையில் அவதிப்படும் இவ் வேளையில் அந்நிய, உள்நாட்டுக் கம்பெனிகளுக்கும், பெரும் முதலாளிகளுக்கும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வழங்கப்படுகின்றன. இது இன்று சகல விதமான வசதியீனங்களாலும் அல்லல் படும் குடியேற்றவாசிகளையும், ஏழை விவசாயிகளையும் பெரும் கம்பனிகளினதும், முதலாளிகளினதும் விவசாயக் கூலிகளாக எதிர்காலத்தில் மாற்றும் நோக்கத்துடன் எடுக்கப்படும் மறைமுக நடவடிக்கையாகும். ஆகவே கம்பெனிகளுக்கும், பெரும் முதலாளிகளுக்கும் வழங்கப்பட்ட நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு ஏழை விவசாயிகளுக்கு வழங்குவதுடன், எதிர் காலத்தில் நிலமற்ற விவசாயிகளுக்கு மட்டுமே காணிகள் வழங்கப்படல் வேண்டும்.

2. கடந்த காலத்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியம் இலங்கையை ஆட்சி செய்த பொழுது எமது மலைகளில் உள்ள காடுகளை அழித்ததன் மூலமும், நமது நாட்டிலிருந்த குளங்களுக்குக் குறுக்காக போக்குவரத்துப் பாதைகளை அமைத்ததன் மூலமும் எமது நீர்ப்பாசன அமைப்புகளைப் பூரணமாகச் சீர்குலைத்து உணவு உற்பத்தியில் நமது சுய தேவையை பூர்த்தி செய்த எமது நாட்டை அந்நிய நாடுகளை உணவுக்காக கையேந்த வேண்டிய நிலைமையை உருவாக்கினர். எச்ச சொச்சமுள்ள நீர்ப்பாசன வசதிகள் கூட ஏகாதிபத்திய வால் பிடிகளான பெரும் நிலச் சொந்தக்காரர்களிடமும், அவர்களையொத்த அரசாங்க அதிகாரிகள் கைகளிலும் இருப்பதால் ஏழை விவசாயிகள் நீர்ப்பற்றுக் குறையால் பூரணமாக நீர் வசதி பெறமுடியாமல் இருக்கிறது. ஆகவே சாதாரண ஏழை விவசாயிகள் பூரணமாக நீர் வசதி பெறத்தக்க முறையில் நீர்ப்பாசனத் திட்டம் திருத்தியமைக்கப்படுவதுடன், வரட்சியான பகுதிகளின் நீர்த் தேவை பூர்த்தி செய்யப்படும் முறையில் மகாவலி கங்கை வடக்கே திருப்பப்படல் வேண்டும்.

3. ஆரம்ப காலத்திலிருந்து பாரபட்சமான முறையில் பல மோசடிகள் மத்தியில் குடியேற்றத் திட்டங்கள் வழங்கப்பட்டன. அரசாங்க அதிகாரிகளாயுள்ளவர்கள் தங்களுடைய நலன்களை முன்வைத்தும், பெரும் பணக்காரர்களின் நிலங்களுக்கு மிருகங்களிலிருந்து பாதுகாப்பு வேலிகளாகவும் குடியேற்றத் திட்டங்களை அமைத்தனர். அது மட்டுமின்றி தங்களுக்கென கணிசமானளவு நீர்ப்பாசன வசதியுள்ள நிலங்களையும் கைப்பற்றினர். சம்பந்தப்பட்ட ஊழற்கார அதிகாரிகளும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற ஸ்தாபனங்களைக் கொள்ளையடிப்பவர்களும் விசாரணை செய்யப்படல் வேண்டும்.

4. இன்றைய நெற்காணிச் சட்டம் குத்தகை விவசாயிகளைக் காணிச் சொந்தக்காரர் நினைத்த நேரத்தில் வெளியேற்றத் தக்கதாய் உள்ளது. ஆகவே குத்தகை விவசாயிகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் விதத்தில் நெற்காணிச் சட்டம் திருத்தியமைக்கப்படல் வேண்டும்.

5. உரிய நேரத்தில் கடன் வழங்கப்படாத காரணத்தாலும் சீரற்ற நீர் விநியோகம் காரணமாகவும் கடந்த காலபோக வேளாண்மை முற்றுகப் பாதிக்கப்பட்டது. ஆகவே விவசாயிகள் கடனைத் திருப்பிக் கட்ட முடியாத நிலையில் கூப்பன்கள் பறிக்கப்பட்டன. விவசாயிகளின் கடன் கட்ட முடியாத நிலைமையை ஏற்படுத்திய அரசாங்கமே அவர்களது கூப்பன்களைப் பறிப்பது எதுவிதத்திலும் நியாயமற்ற தாகையால் பறித்த கூப்பன்கள் உடனடியாகத் திருப்பிக் கொடுக்கப்படல் வேண்டும்.

6. படித்த வாலிபர் திட்டங்களிலுள்ள பள்ளக் காணியை உடையவர்களுக்கும் நீர்ப்பாசனம் செய்ய முடியாத காணியையுடையவர்களுக்கும், மிருசுவில் படித்த பெண்கள் குடியேற்றத் திட்டத்தில் வழங்கப்பட்ட பயனற்ற காணிகளும் மாற்றப்பட்டு நல்ல நிலங்கள் வழங்கப்பட வேண்டும்.

7. கூலி விவசாயிகளுக்கும், விவசாயப் படையினருக்கும் நாளொன்றுக்கு ஒரு ரூபா சம்பள உயர்வு வழங்கப்படுவதுடன், அவர்களுக்கு நீர்ப்பாசன வசதியுள்ள காணிகள் வழங்கப்படல் வேண்டும்.

8. ஒரு அரசாங்க அதிகாரிக்கும், ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் ஏற்பட்ட கேவலமான போட்டியால், 1958ம் ஆண்டு இனக் கலவரத்தால் தமது உடமைகளையெல்லாம் இழந்து தருமபுரத்தில் குடியேறிய மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது. இவர்கள் விஷயத்தில் அரசாங்கம் பிரத்தியேக முறையில் கவனித்து உடனடியாக அவர்களின் பிரஜாவுரிமைகளை வழங்குதல் வேண்டும். அது மட்டுமின்றி ஏனைய குடியேற்றவாசிகளுக்கு வழங்கப்பட்ட வசதிகள் யாவும் வழங்கப்பட வேண்டும். ஏறக்குறைய 10 வருடங்களாக தருமபுரத்தில் இருந்த கடைகளை அப்புறப்படுத்தி அவ்விடத்தில் கிளிநொச்சியிலுள்ள பெரும் முதலாளிகளுக்கு கடைகள் கட்ட காணிகள் வழங்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட்டு, ஏற்கனவே கடை வைத்திருந்தவர்களுக்கே வழங்கப்படல் வேண்டும்.

9. சகல குடியேற்றப் பகுதிகளுக்கும் போக்குவரத்து வசதிகள் செய்யப்படுவதுடன், நகரப் பகுதிகளின் பஸ் கட்டணத்தைவிட ஏறக்குறைய மூன்று மடங்கு கட்டணம் குடியேற்றப் பகுதிகளில் அறவிடப்படுவது மாற்றப்பட்டு நாடு முழுவதும் ஒரே சீரான கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

## கிளிநொச்சி விவசாயிகள் மாநாட்டின் தீர்மானங்கள்

10. பெரும் நிலச் சொந்தக்காரர்களும், வசதி படைத்த தனவந்தர்களும், அந்நிய ஏகாதிபத்திய சார்பு முதலாளிகளும் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றி வைத்திருப்பதால், ஏழை விவசாயிகள் தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமலும், பலவித அடக்கு முறைகளை அனுபவிக்க வேண்டியுள்ளதாலும் வசதி படைத்தவர்களின் அரசியலதிகாரத்தை தூக்கியெறிந்து உழைக்கும் மக்களுடைய அரசியலதிகாரத்தை நிறுவ முன் செல்வோம்.

## சந்திரனில் மனிதன்

1-ம் பக்கத் தொடர்

ஏவுகணையின் மூலம் சந்திரனுக்குவந்ததாக பொடிசிங்கோ பதிலளித்தான். ருஷ்யர்களும், அமெரிக்கர்களும் சந்திரனைச் சென்றடையும் முன்னர் இலங்கையின் வாழ்க்கைச் செலவு சந்திரனை அடைந்துவிடும் என நாமே சந்தேகப்பட்டிருந்தோம். இந்த அண்டவெளிப் பிரயாணத்தில் செலவழிக்கப்பட்ட 30 லட்சம் கோடி அமெரிக்க டொலர்களில் - இலங்கை ரூபாவாக மாற்றுவதற்கு இதனை 6 ஆல் பெருக்கவேண்டும்—ஒரு சிறு பகுதியைத்தானும் பூமியில் மனிதன் படும் துயர்களை நீக்க செலவழிக்க முடியாதா? விஞ்ஞானத்தின் சாதனைகளை மனித வர்க்கத்திற்குச் சேவை செய்ய வைப்பதற்கு முடியாமல் இருப்பதற்கான காரணம் பெரும்பாலான நாடுகளில் அரசு அதிகாரம் ஏகாதிபத்தியவாதிகள்-பெரிய முதலாளிகள் அவர்களது ஏவல்நாய்கள் ஆகியோர் கைகளில் இருப்பதேயாகும். இவர்கள் விஞ்ஞான வளர்ச்சியை பெரும்தொகையான லாபத்தை பெற்றுக் கொள்வதற்கே பயன்படுத்துகின்றூர்கள்.

அமெரிக்கப் பேராசிரியரான லுயிஸ் மம்போர்ட் என்பவர் பின்வருமாறு ஆத்திரத்தோடு கூறியுள்ளார். அவரது கூற்றை இலங்கைப் பத்திரிகை ஒன்று பிரசுரித்திருந்தது. ''அண்டவெளியிலுள்ள சகல கோள்களிலும் பார்க்க மனிதன் வாழ்கின்ற பூமியின் ஒவ்வொரு சதுர மைலும் மனிதனின் வருங்காலத்திற்கு முக்கியமாகும். அண்டவெளியை வெற்றி கொள்வதல்ல நமது கடமை. மனிதத்தன்மையற்ற, பண்பற்ற முறையில் உருவெடுத்துள்ள அதிகார விஸ்தரிப்பிற்கு மனித பண்பாடுகளை இரையாக்கிய பகுத்தறிவற்ற முறைகளை வெற்றி கொள்வதுதான் நமது கடமையாகும்'' என அப் பேராயர் விஷயத்தை சரியாகக் கூறியுள்ளார்.

ஏனைய கோள்களுக்குச் செல்வதற்கு முன்னர் நாம் வாழும் இப் பூமியை வாழத் தகுந்த தாக்குவோம்.

விண்வெளி வீரர்களின் மனத் துணிவைப்பற்றி பக்கம் பக்கமாக எழுதப்பட்டுள்ளது. உண்மையில் அவர்களுக்கு மனத்துணிவு தேவைதான். விஞ்ஞான ரீதியான பல ஒழுங்குகள் செய்துள்ள போதிலும் சிறு அபாயம் ஏற்படக்கூடிய நிலைமையும் உண்டு. இவர்களிலும் பார்க்க மனத் துணிவு கொண்ட மக்கள் இருக்கவில்லையா? நீல் ஆம்ஸ்ரோங்கிற்கும் மனத் துணிவு உண்டு. அதே வேளையில் தன் உடம்பில் வெடி குண்டைக் கட்டிக் கொண்டு நாஜகளின் டாங்கிகளுக்கு முன்னுல் பாய்ந்து ஹிட்லரின் டாங்கிப்படையையும் அழித்து. தன்னையும்அழித்துக் கொண்ட பாசிஸ விரோத கொரில்லா வீரர்களுக்கும் மனத் துணிவு உண்டு. இவர்களில் யாருடைய மனத் துணிவு பாராட்டத் தகுந்தது? உலகிலே வல்லமை பொருந்திய ஏகாதிபத்திய காட்டுமிராண்டிச் செயல்களில் ஈடுபடுகின்ற ஏகாதிபத்திய வல்லரசாகிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொடூரச் செயல்களுக்கு எதிராக தன்னையும் தனது குடும்பத்தினரையும் அர்ப்பணிக்கும் வியட்நாம் விவசாயியின் மனத் துணிவு என்னவென்று சொல்ல வேண்டும்.

மனிதன் சந்திரனிலே காலடி வைத்ததின் மூலம் ஒரு நல்ல செயலையும் செய்துள்ளான். சகல விதமான மத நம்பிக்கைகளும் தவிடு பொடியாக்கப்பட்டன. சந்திரனின் செல்வாக்கு மனிதன்மேல் உள்ளது என்ற நம்பிக்கையும் தகர்ந்தது.

சந்திரனின் செல்வாக்கிலிருந்து தப்புவதற்கு மனிதன் இப்போது அறிந்துள்ளான். அதுமட்டுமல்ல அவன் அதில் காலடியும் வைத்தான். சகல மத நம்பிக்கைகளுக்கும், சாஸ்திரம் என்ற குப்பை கூலங்களுக்கும் மரண அடி கொடுக்கப்பட்டுள்ளது. சோதிடர்கள் வெகு விரைவில் மூட்டைகட்ட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

ஒரு சர்வகலாசாலை விரிவுரையாளர்களுக்கும் மத நம்பிக்கையுள்ள ஒரு பௌத்த மாணவருக்கும் நடைபெற்ற சம்பாஷணையை நாம் அறிந்துள்ளோம். பௌத்தர் ''ஐயா, அமெரிக்கர்கள் சந்திரனில் இறங்குவார்கள் என நீங்கள் நினைக்கின்றீர்களா? என விரிவுரையாளரிடம் வினவினுன். ''ஏன் நீர் அப்படி நினைக்கிறீர்'' என விரிவுரையாளர் மாணவரைக் கேட்டார். ''அப்படி அவர்கள் செல்வார்களேயானுல் பௌத்த மதத்தின் வாழ்வு முடிந்து விடும்'' என மற்றவர் கூறினுர். கத்தோலிக்கருடன் நடைபெற்ற இதைப் போன்ற சம்பாஷணை ஒன்றை பற்றியும் விரிவுரையாளர் கூறினுர்.

மனிதன் சந்திரனுக்குச் சென்றதன் நோக்கம் சமாதானத்திற்காகவே என்று பொறிக்கப்பட்ட சாஸனம் ஒன்றை ஆம்ஸ்ரோங் சந்திரனில் வைத்துவிட்டு வந்துள்ளளாக கூறப்படுகின்றது, அதனை அவர் சந்திரனில் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. அதனை வாசிக்க அங்கு ஒருவருமில்லை. அதனை அவர் தனது ஜனுதிபதியான ரிச்சர்ட் நிக்சனுக்கு அளித்தால் நன்ருக இருக்கும். பென்டாகனிலுள்ள அவரது இராணுவ ஆலோசனையாளர்கள் இவ் விண்வெளிச் சாதனையை எவ்வாறு இராணுவ நடவடிக்கைகளுக்குப் பாவிக்கலாம் என்பதனை ஆராய இப்போதே தொடங்கி விட்டனர். 30 லட்சம் கோடி அமெரிக்க டொலர்களை அவர்கள் விளையாட்டிற்காகச் செலவளிக்கவில்லை. சந்திரனை வெற்றிகொண்ட வீரர்கள் என்று கூறப்படுபவர்களால் அமெரிக்காவில் நீக்ரோ இன மக்கள் ஒழித்துக் கட்டப்படுவதையும், வியட்நாமில் அவர்கள் நடாத்தும் அட்டூழியங்களையும், மனிதனின் கவனத்திலிருந்து திசை திருப்புவதற்காக இந்த விண்வெளி யாத்திரை பாவிக்கப்படுகின்றது.

மனிதனை மனிதனும், தேசங்களைத் தேசங்களும் சுரண்டும் முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு எமது முயற்சிகளை இரட்டிப்பாக்குவோம். இப் பூமியில் இன்பம் நிறைந்த வாழ்க்கை வாழ்வதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்வோம்.

பொது மக்களுக்குச் சேவை செய்தால்தான் விஞ்ஞானம் தனது உரித்தான பங்கை வகிக்க முடியும். இந்த விண்வெளி யாத்திரையைத் திட்டமிட்ட ஏகபோக ஆட்சியினருக்கு சேவை செய்யவும் காலம் வரை விஞ்ஞானம் தனது உரிய இடத்தை எடுக்க முடியாது.

---

◎ ஹர்த்தால் தினத்தை நினைவு படுத்தவும்;

◎ பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால் ஆதிக்கம் செலுத்தப்படும் நமது பொருளாதாரத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும், இந்திய விஸ்தரிப்பாளர்களும் மேலும் ஊடுருவல் செய்வதைக் கண்டிக்கவும்;

◎ உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவையும், பெருகி வரும் வேலையில்லாப் பிரச்சினையையும் தீர்க்க முடியாத ஆட்சியைக் கண்டிக்கவும்;

◎ தொழிலாளர்களுக்கு சம்பளவுயர்வும், விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் உத்தரவாத நெல் விலை உயர்த்தப்பட வேண்டும் என வற்புறுத்தவும்;

◎ முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தின் பங்கலோட்டு தனத்தை அம்பலப் படுத்தவும்;

◎ அந்நிய ஏகாதிபத்தியங்களையும், நிலப்பிரபுத்துவத்தையும், அதன் காவல் நாய்களையும் எதிர்த்துப் போராட தொழிலாளர், விவசாயிகள், மாணவர், புரட்சிகர புத்திஜீவிகளின் புரட்சிகர ஐக்கியத்திற்கான அறைகூவல் விடுக்கவும்;

# பொதுக் கூட்டம்

ஆகஸ்ட் மாதம் 12ந் திகதி மாலை 4 மணிக்கு
கொம்பனித் தெரு, சோண்டர்ஸ் பிளேஸில் நடைபெறும்.

**இக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக கம்பஹா யு. சி. மைதானத்திலிருந்து பகல் 1 மணிக்கு பைசிக்கள் ஊர்வலம் புறப்படும்.**

பேச்சாளர்கள்: எஸ். டி. பண்டாரநாயக்கா, எம். பீ.
எச். எல். கே. கரவிட்ட, வொட்சன் பெர்ணுந்து,
ஆரியவன்ச குணசேகர, என். சண்முகதாசன்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி,
இலங்கை தொழிற் சங்க சம்மேளனம்,
அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம்,
செங்கொடி வாலிபர் சங்க சம்மேளனம்.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஜயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: ''தொழிலாளி'' அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2